www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

11 DECEMBER 2022 - SUNDAY

Pages - 09

E Paper - # 019 / Y 01 / 2022

Web: WWW.NEWSPLUS.LK

E-mail: editor@newsplus.lk

## சகல பாடசாலைகளும் நாளை நடைபெறும்

நாளை பாடசாலைகள் வழமைபோல் நடைபெறும்.கல்வி அமைச்சு சற்றுமுன் வெளியிட்ட அறிவிப்பு அனைத்து அரச மற்றும்

02 »»

### இனப் பிரச்சினைக்கான தீர்வு;

# சர்வ கட்சி மாநாட்டில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் பங்கேற்பு



தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணும் நோக்குடன் பேச்சை ஆரம்பிப்பது தொடர்பில் கலந்துரையாட நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் நடைபெறவுள்ளது என்று தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்,

02 »»

## ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள் கண்டறியப்பட வேண்டும்

### பேராளர் மாநாட்டில் றிஷாத் எம்.பி.



"ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள் கண்டறியப்பட வெண்டும் என்பதில் மக்கள் காங்கிரஸ் தொடர்ச்சியான அழுத்தம் கொடுக்கும்"- பேராளர் மாநாட்டில் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் அறிவிப்பு!

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகளும் அதற்கு பின்புலத்தில் நின்றவர்களும் கண்டறியப்பட வேண்டும் என்பதிலும், முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அநியாயமாக

02 »»

## பௌத்த, இந்து, கிறிஸ்தவ திணைக்களங்கள் முஸ்லிம் விவகார கட்டிடத் தொகுதியில்

### உடன் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள்

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு சொந்தமான 09 மாடிக்கட்டிட தொகுதியின் ஒருசில மாடிகளை பௌத்த, இந்து மற்றும் கிறிஸ்தவ சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மேலும் பல பிரிவுகள் இங்கு செயற்படுத்தப்பட வேண்டியுள்ள நிலையில் ஏனைய மத விவகாரங்களுக்கு இந்த மாடிகள் கையளிக்கப்படுவதனை முஸ்லிம் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பிரமுகர்களும் உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட அவர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின்

02 »»

## இலங்கையின் கலாச்சாரத்தை அழிக்க அரசியல்வாதிகளை அனுமதிக்காதீர்

### பேராயர், மகா சங்கத்தினரிடம் கோரிக்கை

பௌத்த மதத்தின் ஊடாக போஷிக்கப்பட்ட நாட்டின் கலாசாரத்தை அழிக்க அரசியல்வாதிகளுக்கு இடமளிக்கக் கூடாது என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான முயற்சிகளை முறியடிக்குமாறு பௌத்த மகா சங்கத்தினர்

02 »»

## வரலாறு படைத்த மொரோக்கோ; கண்ணீருடன் விடைபெற்ற ரொனால்டோ

### அரை இறுதிகள் புதனன்று ஆரம்பம்



அப்ரித் வஸீர்

கத்தாரில் நடைபெற்று வரும் உலகக்கிண்ண கால்ப்பந்தாட்ட தொடரின் காலிறுதிப்போட்டியில் அரபு நாடான மொரோக்கோ அணி வரலாறு படைத்துள்ளது.போர்த்துக்கல் அணிக்கு எதிரான போட்டியில் 1-0 என்ற அடிப்படையில் வெற்றியீட்டியதன் மூலம் அரையிறுதி வாய்ப்பினை முதற்தடவையாக மொரோக்கோ அணி வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. நேற்று நடைபெற்ற

03 »»

## உள்ளூராட்சி தேர்தல் பற்றி ஆராய ஜனாதிபதி தலைமையில் கட்சி தலைவர் கூட்டம்

### தேர்தலை ஒத்திப்போட முஸ்தீபு

### எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

உள்ளூராட்சி தேர்தல் முறை மாற்றங்கள் தொடர்பாக சிபாரிசுகளை மேற்கொள்வதற்காக அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை நியமிப்பதற்கு ஆலோசித்து வருகின்றது.

இது தொடர்பாக ஆராய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் செவ்வாய்க்கிழமை

02 »»

## தமிழர்களுக்கு நடந்த அநீதிக்கு நீதி கேட்டே போராடுகிறோம்

### சாணக்கியன் எம்.பி.

"நாங்கள் சிங்கள மக்களுக்கு எதிராகப் போராடவில்லை. தமிழ் மக்களுக்கு நடந்த அநீதிக்கு நீதி கேட்டே ஆட்சியாளர்களுக்கு எதிராக நாங்கள்

02 »»

## ஆட்கடத்தல் சம்பவங்கள் ஓமான் சென்ற அதிகாரிகள்

02 »»

## ஈஸ்டர்...
(முன்பக்கத் தொடர்ச்சி..)

எரித்தவர்கள் கண்டிக்கப்பட வேண்டும் என்பதிலும், பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்பதிலும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுதியுடன் இருப்பதாக கட்சியின் தலைவர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

முஸ்லிம்களை மிக மோசமாக பாதித்த இந்த விடயங்களுக்கு நடவடிக்கை எடுக்காத எவருக்கும் எமது கட்சி ஒத்துழைப்பு வழங்காது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பேராளர் மாநாடு, கட்சியின் தலைவர் ரிஷாட் பதியுதீன் தலைமையில், இன்று (10) தெஹிவளை, ரோஸ்வூட் செலோனில் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றிய தலைவர் ரிஷாட் மேலும் கூறியதாவது,

"பல சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் மத்தியிலேயே கட்சியை வழிநடத்தி வருகின்றோம். சிறுபான்மை கட்சிகள் தேவையா? இல்லையா? என்ற வாதப்பிரதிவாதங்கள் ஒரு காலத்தில் இடம்பெற்றது. பெரும்பான்மை கட்சிகளில் உள்ள சிறுபான்மை இனத்தை சேர்ந்தவர்கள், தமது இனத்துக்கு அநீதி இழைக்கப்படும்போது தட்டிக் கேட்க வக்கத்தவர்களாகவும் பேசாமடந்தைகளாகவும் இருந்த வேளை, தமது சமூகத்தின் உரிமைக்காக குரல் கொடுப்பதற்காகவே முஸ்லிம் கட்சிகள் தோற்றம் பெற்றன.

அந்தவகையில், காலவோட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் உருவாகி, மிக குறுகிய காலத்தில் வளர்ச்சி பெற்றது. எமது கட்சிக் கொள்கையில் பற்றுக்கொண்டவர்கள் இதில் சங்கமமாகினர். முஸ்லிம்கள் மாத்திரமன்றி இந்துக்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் என எமது கட்சியில் அங்கத்துவம் பெற்றனர். பன்முகத்தன்மையும் இனவாதமற்ற போக்கும் சகல இனத்தையும் சமமாக மதிக்கும், கருதும் பாங்கும் இருந்ததினால்தான் மக்களின் அங்கீகாரம் கிடைத்தது.

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் வடக்கு, கிழக்கில் நாங்கள் பல சபைகளை கைப்பற்றினோம். அதுவும் நூறு சதவீதம் தமிழர்கள் வாழும், யுத்தத்தால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச சபையை நாம் கைப்பற்றினோம். மன்னாரில் 70 சதவீதம் தமிழர்கள் வாழும் மாந்தை மேற்கு பிரதேச சபையின் 11 வட்டாரங்களையும் கைப்பற்றி ஆட்சியை பிடித்தோம். கிறிஸ்தவர் ஒருவரை தவிசாளர் ஆக்கினோம். அவர் மரணித்ததன் பின்னர் இந்து சகோதரர் ஒருவரை தவிசாளர் ஆக்கினோம். அதேபோன்று, வட மாகாண சபையில், தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழும் வவுனியாவில் இருந்து பௌத்தர் ஒருவரை எமது கட்சியின் சார்பில் மாகாண சபைக்கு அனுப்பினோம். சமத்துவம், சகோதரத்துவம், இன சவுஜன்யம் ஆகியவற்றின்பால் எமது கட்சி பயணிப்பதனால்தான், அனைத்து இன மக்களையும் அரவணைத்து செல்ல முடிகின்றது. அனைத்து சமூகத்தவரையும் அதிகாரத்தில் அமர்த்த முடிகின்றது.

எந்தவிதமான பேதமும் இன்றி நாம் பயணிப்பதில் காழ்ப்புணர்வு கொண்ட அரசியல் சக்திகள் எம்மை வீழ்த்த சதி செய்தன. இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டி, தலைமையையும் கட்சியையும் சிதைக்கதலைப்பட்டன. தலைமை மீது போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி சிறையில் அடைத்தனர். இல்லாத பொல்லாததை எல்லாம் ஊடகங்கள் வாயிலாகவும் மேடைகள் மூலமும் விஷமாகக் கக்கி, தலைமையையும் கட்சியையும் சிதைக்க முயன்றனர். இனவாதத்தை மூலதனமாக்கிஆட்சியை பிடித்தனர். ஆனால், எந்தவொரு குற்றச்சாட்டுக்களும் இதுவரை நிரூபிக்கப்படவில்லை. அத்துடன், சட்டத்துறை நேர்மையாக செயற்பட்டதனால் பல குற்றச்சாட்டுக்களிலிருந்து தலைமை நிரபராதி என்று நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

அது மாத்திரமன்றி, கட்சிப் போராளிகளின் தியாகத்தினாலும் நமது அர்ப்பணிப்புக்களினாலும், மக்கள் காங்கிரஸ் மூலம் பதவிக்கு வந்தவர்கள், கட்சிக் கொள்கைக்கு மாறாக செயற்பட்டு, துரோகம் இழைத்தனர். அவர்களும் எமது கட்சியை அழிக்க கங்கணங்கட்டி வருகின்றனர்.

எனினும், மக்கள் ஆதரவு பெற்ற இந்தக் கட்சி தொடர்ந்தும் நேரிய வழியில், முன்னேற்றப் பாதையில் பயணிக்கும் என்பதை உறுதியாக கூறுகின்றோம்.

நாங்கள் கடந்த காலங்களில் பல்வேறு சமூக பிரச்சினைகளுக்காக முன்நின்று உழைத்தவர்கள். பிரச்சினைகளை கண்டு ஓடி ஒழிந்தவர்கள் அல்லர். எதிர்வரும் காலங்களிலும் இந்தக் கட்சி மக்கள் நலனுக்காகவே காரியமாற்றும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி இனப்பிரச்சினை தொடர்பில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் எமது கட்சிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தமிழர்களும் முஸ்லிம்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, சந்தோசமாக வாழக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்துவதற்கான ஆலோசனைகளை எமது கட்சி முன்வைக்கும் என தெரிவித்துக்கொள்கின்றேன்" என்று கூறினார்.

## தமிழர்களுக்கு...
(முன்பக்கத் தொடர்ச்சி..)

போராடுகின்றோம்" - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

"இலங்கை என்ற ஒரு நாடு மனித உரிமைகளை மதிக்காத நாடாக இருக்கும் வரைக்கும் இந்தப் பொருளாதாரத்தை ஒரு நாளும் கட்டியெழுப்ப முடியாது என்பதை தெற்கில் உள்ள மக்களும் சரி, ஆட்சியாளர்களும் சரி உங்கள் மனதில் ஆழமாகப் பதித்து வைத்துக் கொள்ளுங்கள்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் நீதி கோரி நேற்று (10) மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் இருந்து காந்தி பூங்கா வரை நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: - "பல மனித உரிமைகளுக்குப் பெயர் போன நாடுதான் இலங்கை. 1948 ஆம் ஆண்டிலிருந்து மனித உரிமை மீறல்கள் பெருமளவு நடந்தன. அவை பெரும்பான்மை சமூகத்தால் எங்கள் சமூகத்துக்கு எதிராகத்தான் நடந்தன.

அண்மைக்காலங்களில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக ஜனாஸா எரிப்பு போன்ற பாரிய மனித உரிமை மீறல்கள் கூட நடந்தன.

இதன்பின்னர்தான் தெற்கில் "கோட்டா கோ கம" போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் வன்முறைகளை மேற்கொண்டனர். அங்கும் பாரிய மனித உரிமை மீறல்கள் அரங்கேறின.

இதெல்லாம் வடக்கு, கிழக்கில் ஒவ்வொரு நாளும் அரங்கேறும் சர்வ சாதாரண விடயம் என்று "கோட்டா கோ கம" போராட்டக்காரர்களிடம் நாம் கூறினோம்.

மனித உரிமை மதிக்கும் நாடாக இலங்கை மாறும் வரைக்கும் இந்த நாட்டுக்கு எதிர்காலம் இல்லை. மனிதனுக்கே மதிப்பில்லை என்றால் அவ்வாறான நாடு எவ்வாறு ஒரு ஜனநாயக வழியில் - பொருளாதார வழியில் அபிவிருத்தியடைய முடியும் என்பதைப் பெரும்பான்மை சமூகம் உணரவேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட இந்தத் தாய்மார்களின் அழுகுரல்களுக்கு விரைவில் நீதி கிடைக்க வேண்டும்.

நாங்கள் சிங்கள மக்களுக்கு எதிராகப் போராடவில்லை. சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சியாளர்களுக்கு எதிராகவே நாங்கள் போராடுகின்றோம். எங்கள் மக்களுக்கு நடந்த அநீதிக்கு நீதி கேட்டே நாங்கள் போராடுகின்றோம்" - என்றார்.

## சகல...
(முன்பக்கத் தொடர்ச்சி..)

அரச அனுசரணை பெற்ற பாடசாலைகளை நாளை (12) மீண்டும் திறக்கப்படவுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்த் குமார் எமது செய்தி சேவைக்கு தெரிவித்தார்.

சீரற்ற காலநிலை காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை அனைத்து அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டது.

இந்தநிலையில், தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு நாளை முதல் மீண்டும் பாடசாலைகளை வழமைபோல நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, மோசமான காலநிலை காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை மூடப்பட்ட பாடசாலைகள் மீண்டும் திறத்தல் தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு இணங்க, நாட்டிலுள்ள அனைத்து கத்தோலிக்க பாடசாலைகளும் நாளை (12) மீண்டும் திறக்கப்படும் என ஆயர் இல்லம் தெரிவித்துள்ளது.

## இலங்கையின்...
(முன்பக்கத் தொடர்ச்சி..)

தலைமையிலான மதத் தலைவர்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நீர்கொழும்பில் இன்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய கர்தினால் ரஞ்சித், நாட்டை உயர்த்த சிந்தனையில் மாற்றம் பிறக்க வேண்டும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆட்கடத்தல்...
(முன்பக்கத் தொடர்ச்சி..)

ஆட்கடத்தல் தொடர்பான சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்ய வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று ஓமான் நோக்கி சென்றுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த நாட்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய ஓமான் ஆட் கடத்தல் தொடர்பான சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் பணிப்புரையின் பேரில் குறித்த குழு நேற்று (10) பயணித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மேலதிக பொது முகாமையாளர், மூன்று விசாரணை அதிகாரிகள் மற்றும் ஒரு பொலிஸ் பரிசோதகர் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் ஒரு பெண் உப பொலிஸ் பரிசோதகர் ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தை மீறி வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டவர்கள் தொடர்பில் அண்மைய நாட்களில் பதிவாகியுள்ள சம்பவங்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

## உள்ளூராட்சி...
(முன்பக்கத் தொடர்ச்சி..)

அரசியல் கட்சி தலைவர்களது கூட்டமொன்றை கூட்டவுள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களது எண்ணிக்கை 8700 லிருந்து 4000 ஆகக் குறைப்பது உட்பட மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்படும் என நீதி, அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை, இக்கூட்டம் தேர்தலை ஒத்திப் போடுவதற்கான ஒரு முயற்சி எனத் எதிர்க்கட்சிகள் தெரிவித்து வருகின்றன.

கட்சி தேர்தலுக்கான உத்தியோபூர்வ அறிவிப்பு இம்மாத இறுதியில் கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழு கடைசியாக நடாத்திய அதன் கூட்டத்தில் தீர்மானித்துள்ளது.

இதன்படி மாதக் கடைசியில் அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டு தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் கூறும் திகதியும் அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு அங்கத்தவர் ஒருவர் நியூஸ் ப்ளஸ்க்குத் தெரிவித்தார்.

### வாசகர்களே!

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.

அவ்வாறு தேவையுடயோர் 075 40 10 238 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

NEWS PLUS

## சர்வ கட்சி...
(முன்பக்கத் தொடர்ச்சி..)

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி மற்றும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி உள்ளிட்ட கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்க வருமாறு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்களக் கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

மேற்படி கூட்டம் சர்வகட்சிக் கூட்டமாகவே நடைபெறவுள்ளது.

எவ்வாறாயினும், ஒற்றையாட்சியைக் கைவிட்டு சமஷ்டி அடிப்படையில் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளிக்காமல் இந்தக் கலந்துரையாடலுக்குத் தமது கட்சி செல்லாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளன என்று இறுதியாகக் கிடைத்த தகவல் உறுதிப்படுத்தியது.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகளான எம்.ஏ.சுமந்திரன் (தமிழரசுக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ) மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) ஆகியோர் கடந்த வாரம் மேற்படி கூட்டம் தொடர்பில் தனித்தனியாக ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடினர் என்று அறியமுடிந்தது.

## பௌத்த...
(முன்பக்கத் தொடர்ச்சி..)

விவகாரங்களுக்காகவே இந்த 09 மாடிக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டது. இத்திணைக்களத்தின் பல பிரிவுகள் இன்னும் ஸ்தாபிக்கப்பட வேண்டியுள்ளது. இது இவ்வாறு இருக்க ஏனைய மத விவகார திணைக்களங்களுக்கு ஒரு சில மாடிகளை வழங்குவதால் எதிர்காலத்தில் முஸ்லிம் சமய விவகார பணிகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படக்கூடும் என்றும் இவர்கள் அச்சப்படுகின்றனர்.

எனவே உடனடியாக இப்பணிகளை தடுத்து நிறுத்த முஸ்லிம் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆவன செய்ய வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

முஸ்லிம்களின் சமய பண்பாட்டு விடயங்களுக்காக நிரந்தரக் கட்டிடம் ஒன்று இல்லாத நிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களினால் மருதானையில் ஒரு காணித்துண்டு வழங்கப்பட்டு 2004இல் சிறிய கட்டிடம் ஒன்று கட்டப்பட்டு இயங்கி வந்த நிலையில் இடப்பற்றாக்குறை காரணமாக திணைக்களத்தின் சகல பகுதிகளுக்குமான 9 மாடி கட்டிடம் ஒன்று கட்டப்பட்டு 3 மாடிகள் பூரணப்படுதப்பட்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் 2019இல் திறந்து வைக்கப்பட்டதுடன் ஏனைய மாடிகள் அரசின் நிதிப்பற்றாக்குறை காரணமாக வேலைகள் இடை நிறுத்தப்பட்டன. பின்னர் வந்த அரசாங்கங்கள் நிதி வழங்காத நிலையில் இன்றுவரை அது நடைபெறவில்லை.

முஸ்லிம்களுக்கு என வழங்கப்பட்ட குறித்த கட்டிடத்தின் சில மாடிகளை புத்தசாசன அமைச்சு கத்தோலிக்க மற்றும் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களங்களுக்கு தருவதாக கூறி தற்போது அதற்கான வேலைகள் விரைவாக இடம் பெற்று வருகின்றது. இது முஸ்லிம்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தி உள்ளது.

இதனை உடன் தடுத்து நிறுத்த வேண்டும் என முஸ்லிம் கோரிக்கை விடுக்கின்றனர்.

இக் கட்டிடம்
திணைக்களத்தின்
நிருவாக கிளை
கணக்கு கிளை
ஹஜ் விவகார கிளை
சமய விவகார கிளை
கலை கலாச்சார கிளை
பள்ளிவாசல்கள் கிளை
நூலகம்
கேட்போர் கூடம்
வக்பு சபை நீதி மன்றம்
வக்பு நியாய சபை மன்றம்
தகம் பாசல் (அஹதியா) பகுதி
மற்றும் வதிவிட பயிற்சிக்கான பகுதி என இக்கட்டிடம் திட்டமிடப்பட்டுள்ளது.

இது ஏனைய திணைக்களங்களுக்கு வழங்கினால் முஸ்லிம் சமூகத்திற்கான மேற்படி திட்டங்கள் தடைப்படும்.

இக் கட்டிடம் முழுமையாக முஸ்லிம்களுக்கு தேவை இல்லை என புத்தசாசன அமைச்சுக்கு காட்டிக் கொடுத்தவர் முன்னைநாள் பணிப்பாளர் ஒருவராவார்.

## வரலாறு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பிரிதொரு போட்டியில் பிரான்ஸ் அணி 2-1என இங்கிலாந்தை தோற்கடித்து அரையிறுதிக்கான வாய்ப்பை தட்டிக்கொண்டது. மொரோக்கோவின் இந்த வெற்றியையடுத்து இதனை அரபுநாடுகள் கொண்டாடி வருகின்றன. மொரோக்கோ, கட்டார், பலஸ்தீன் உட்பட அரபு நாடுகளில் ஆதரவாளர்கள் ஆடிப்பாடி தமது மகிழ்ச்சியை வெளிக்காட்டிவருகின்றனர். டிசம்பர் 9ம் திகதி இரவு 8.30 மணிக்கு நடைபெற்ற முதல் காலிறுதியில் குரோசியா, பிரேசில் அணிகள் மோதின. இதில் குரோசியா பெனால்டி அடிப்படையில் வெற்றி ஈட்டி அரையிறுதிக்கு தகுதி பெற்றது. இரண்டாவது காலிருதியில் ஆர்ஜன்டீனா மற்றும் நெதர்லாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்றது. இதில் 4-3 எனும் அடிப்படையில் பெனால்டி மூலம் அரையிறுதிக்கு ஆர்ஜன்டீனா தகுதிபெற்றது.

கத்தார் கால்பந்தாட்ட அரங்குகள் நாளுக்கு நாள் ரசிகர்களுக்கு பல வியப்புக்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது என்று சொன்னால் மிகையாகாது. கால்பந்தாட்டப் போட்டிகள் கடந்த மாதம் 20-ம் திகதி கத்தாரில் தொடங்கியது. இதில் 32 நாடுகள் பங்கேற்றின. அதில் 8 பிரிவுகள் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும் 4 அணிகள் இடம்பெற்றன. லீக் சுற்றுகள் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் நாக்-அவுட் ரவுண்டான 2-வது சுற்றுக்கு நுழையும். இதில் நெதர்லாந்து , செனகல் (குரூப் ஏ), இங்கிலாந்து, அமெரிக்கா (பி), அர்ஜென்டினா, போலந்து (சி), பிரான்ஸ், ஆஸ்திரேலியா (டி), ஜப்பான், ஸ்பெயின், (இ), மொராக்கோ , குரோஷியா (எப்) , பிரேசில், சுவிட்சர்லாந்து (ஜி), போர்துக்கல், தென் கொரியா (எச்) ஆகிய 16 நாடுகள் 2-வது சுற்றுக்கு தகுதி பெற்றன.

லீக் சுற்று முடிவில் அர்ஜென்டினா, பிரேசில், பிரான்ஸ் ஆகிய அணிகள் கால்இறுதிக்கு வந்து விட்டாலும், தங்களது லீக்கில் தலா ஒரு அதிர்ச்சி தோல்விகளை சந்தித்தன. முன்னாள் சாம்பியன்களான ஜெர்மனி, உருகுவே லீக் சுற்றுடன் நடையை கட்டின. இந் நிலையில், நாக் அவுட் சுற்றுகள் 6ம் திகதி நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தன. நாக் அவுட் சுற்றில் வென்றதன் மூலம் நெதர்லாந்து, அர்ஜென்டினா, பிரான்ஸ், இங்கிலாந்து, குரோசியா, பிரேசில், மொராக்கோ, போர்ச்சுக்கல் ஆகிய அணிகள் காலிறுதிக்கு தகுதி பெற்றன.

இந்த நிலையில் சர்வதேச கால்பந்து சம்மேளன தலைவர் (பிபா) கியானி இன்பான்டினோ கடந்த 7ம் திகதி அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது:- ”இதுவரை நடந்துள்ள எல்லா ஆட்டங்களையும் நான் பார்த்தேன். உலகக் கோப்பை வரலாற்றில் ஆகச்சிறந்த குரூப் பிரிவு ஆட்டங்களாக இவை இருந்தன என்பதை உறுதியாக கூற முடியும். அந்த வகையில் இந்த உலகக் கோப்பை போட்டி நினைவில் நிலைத்து நிற்கும். அழகான மைதானங்களில் அரங்கேறிய ஒவ்வொரு ஆட்டமும் தரமும், விறுவிறுப்பும் நிறைந்ததாக இருந்தது. சராசரியாக 51 ஆயிரம் ரசிகர்கள் இதுவரை 20 லட்சத்திற்கும் மேற்பட்டோர் நேரில் கண்டுகளித்தனர். டி.வி.யில் பார்த்த ரசிகர்கள் எண்ணிக்கையிலும் சாதனை படைத்துள்ளது. இந்த எண்ணிக்கை நம்ப முடியாத அளவுக்கு ஏற்கனவே 200 கோடியை தாண்டி விட்டது. வரலாற்றில் முதன்முறையாக எல்லா கண்டங்களைச் சேர்ந்த அணிகளும் “நாக்-அவுட்“ சுற்றுக்கு வந்துள்ளன. இவை கால்பந்து விளையாட்டு உலகம் முழுவதும் பரவியிருப்பதை காட்டுகிறது. நாக்-அவுட் சுற்றில் 8 ஆட்டங்களில் 28 கோல்கள் அடிக்கப்பட்டன. 1986-ம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட16 அணிகள் பிரிவில் அடிக்கப்பட்ட அதிகபட்ச கோல்களாகும். தொடக்கத்தில் எப்படி இருந்ததோ அதே மகிழ்ச்சியும், உற்சாகமும் இந்த ஆட்டங்கள் நிறைவடையும் வரை தொடரும் என ஊகிக்க முடிகின்றதாகவும், உலகம் முழுவதும் ஏறக்குறைய 500 கோடி மக்கள் போட்டியை கண்டுகளிப்பார்கள் என்று நம்புகிறேன்.” இவ்வாறு இன்பான்டினோ கூறியிருந்தார்.

உலக கோப்பை கால்பந்து போட்டி- நாக்அவுட் சுற்றில் அமெரிக்காவை வீழ்த்தியது நெதர்லாந்து

ஆட்டம் தொடங்கிய 10 வது நிமிடத்தில் நெதர்லாந்து வீரர் மெம்பிஸ் டிபே முதல் கோல் அடித்து அணியை முன்னிலை பெறச் செய்தார். தொடர்ந்து 46வது நிமிடத்தில் அதே அணியை சேர்ந்த டேலி பிளைன்ட் 2வது கோல் அடித்தார். இதையடுத்து முதல் பாதி முடிவில் 2-0 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து அணி முன்னிலை பெற்றிருந்தது. 2வது பாதி ஆட்டத்தில் 76 வது நிமிடத்தில் அமெரிக்காவின் ஹாஜி ரைட் ஒரு கோல் அடித்தார். ஆட்டத்தின் 81வது நிமிடத்தில் நெதர்லாந்து வீரர் டென்சில் டம்ப்ரைஸ் தமது அணிக்காக 3வது கோலை அடித்தார். ஆட்டத்தின் முடிவில் நெதர்லாந்து அணி 3-1 என்ற கோல் கணக்கில் அமெரிக்காவை வீழ்த்தி காலிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றது.

சுவிட்சர்லாந்தை 6-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது போர்ச்சுக்கல்

ஆரம்பம் முதலே போர்ச்சுக்கல் வீரர்கள் சிறப்பாக ஆடினர். முதல் பாதியில் பிரேசிலின் ராமோஸ் 17வது நிமிடத்திலும், பெப் 33-வது நிமிடத்திலும் தலா ஒரு கோல் அடித்தனர். இதனால் முதல் பாதியில் போர்ச்சுக்கல் அணி 2-0 என முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியிலும் போர்ச்சுக்கல் கோல் மழை பொழிந்தது. போர்த்துக்களின் ராமோஸ் 51-வது நிமிடத்திலும், ரபேல் கியூரியோ 55-வது நிமிடத்திலும், ராமோஸ் 67-வது நிமிடத்திலும், 92-வது நிமிடத்தில் ரபேல் லியோ தலா ஒரு கோல் அடித்தனர். சுவிட்சர்லாந்து சார்பில் 58வது நிமிடத்தில் மானுவல் அகாஞ்சி ஒரு கோல் அடித்தார். இறுதியில், போர்ச்சுக்கல் அணி 6-1 என்ற கணக்கில் சுவிட்சர்லாந்தை எளிதில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.

2027-ம் ஆண்டுக்கான ஆசிய கோப்பை போட்டியை நடத்தும் உரிமையை பெறும் முயற்சியில் இருந்து இந்திய கால்பந்து சம்மேளனம் பின்வாங்கியது

2027-ம் ஆண்டுக்கான ஆசிய கோப்பை போட்டியை நடத்தும் உரிமையை பெறும் முயற்சியில் இருந்து இந்திய கால்பந்து சம்மேளனம் பின்வாங்கியது. 19-வது ஆசிய கோப்பை கால்பந்து போட்டி 2027-ம் ஆண்டு நடைபெறுகிறது. இந்த போட்டியை நடத்தும் உரிமத்தை பெற இந்தியா, சவுதி அரேபியா, ஈரான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளை சேர்ந்த கால்பந்து சம்மேளனங்கள் ஆசிய கால்பந்து கூட்டமைப்பிடம் முறைப்படி விண்ணப்பித்து இருந்தன. இந்த முயற்சியில் இருந்து ஈரான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் கடந்த அக்டோபர் மாதம் ஒதுங்கி விட்டன. இதனால் இந்தியா, சவுதி அரேபியா இடையே நேரடி போட்டி நிலவியது. ஆசிய கோப்பை போட்டியை நடத்தும் வாய்ப்பை யாருக்கு வழங்குவது என்பது குறித்து பக்ரைனில் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெறும் ஆசிய கால்பந்து கூட்டமைப்பின் கூட்டத்தில் முடிவு செய்யப்படுகிறது. இந்த நிலையில் 2027-ம் ஆண்டுக்கான ஆசிய கோப்பை போட்டியை நடத்தும் உரிமையை பெறும் முயற்சியில் இருந்து இந்திய கால்பந்து சம்மேளனம் நேற்று பின்வாங்கியது. தற்போதைய நிலைமையில் பெரிய போட்டிகளை நடத்துவதை விட கால்பந்துக்கான உள்கட்டமைப்பு வசதிகளை எல்லா மட்டங்களில் உருவாக்குவதிலும், இளைஞர்களின் ஆட்டத்தை மேம்படுத்தும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதிலும் கவனம் செலுத்த இருப்பதாக இந்திய கால்பந்து சம்மேளனம் கூறியுள்ளது.

பல விறுவிருப்பான போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலையில் ஒவ்வொரு நாளும் காற்பந்து ரசிகர்கள் மிகவும் ஆர்வமாக இப்போட்டிகளை கண்டு கழிக்கின்றனர்.










# அரங்கம்

### 2002 பலம் வாய்ந்த நூறு பெண்களில் சந்தியாவும் தெரிவு

பி.பி.ஸியினால் 2002 ஆம் ஆண்டுக்கான உலகின் பலம் வாய்ந்த நூறு பெண்களது பெயர்களை வெளியிட்டுள்ளது. இந்த நூறு பெண்களில் ஒருவராக இலங்கை பெண்மணியான சந்தியா எக்னெலிகொட தெரிவு செய்யப்பட்டுள்ளார். 2010 ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்ட தனது கணவர் ஊடகவியலாளர் பிரதீப் எக்னெலிகொடவை தேடுவது தொடர்பாக தொடராது நடத்திவரும் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதனால் அவரை உலகின் பலம்வாய்ந்த 100 பெண்களில் ஒருவராக தெரிவு செய்திருப்பதாக பி.பி.ஸி தெரிவித்துள்ளது.

பி.பி.ஸியின் இந்த அறிக்கை தொடர்பாக சந்தியா எக்னெலிகொட குறிப்பிடும் போது "நான் எப்போதும் மற்றவர்களின் வசைபாடல்களுக்கு மத்தியில் அர்ப்பணத்துடன் செயற்பட்டு வெற்றிபெறும் பெண்மணி என்று தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்பு உலகின் துணிச்சல் மிக ஒரு பெண்ணாக அமெரிக்கா சந்தியாவுக்கு விருது வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

### ஜனாதிபதியுடன் புகைப்படமெடுத்த அரகலை சட்டத்தரணிகள்

2022 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுடன் வியாழனன்று நிறைவேற்றப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டின் நீண்ட பாராளுமன்ற அமர்வு வெள்ளியுடன் நிறைவு பெற்றது.

வழமைக்கு மாறாக வரவு - செலவு திட்ட வாக்கெடுப்பு முடிந்ததும் பாராளுமன்றதுக்கு விடுமுறை வழங்கப்பட்டாலும், இம்முறை அவசரமாக நிறைவேற்றப்படவேண்டிய நிதி சட்டமூலங்களை நிறைவேற்றுவதற்காக வெள்ளியன்றும் பாராளுமன்றம் கூடியது.

பாராளுமன்றத்தில் கடைசி வாரம் பரபரப்பாக விவாதங்கள் நடைபெற்றதோடு, இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயின் விவாதம் உச்சகட்டத்தை அடைந்தது.

அமைச்சர் டயானா ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுடன் பலமாக மோதிக்கொண்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேலைப்பழுமிக்கவராகவே இந்த வாரங்களில் காணப்பட்டார். ரணில் விக்கிரமசிங்க சட்டத்தரணியாகி 50 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு சட்டத்தரணிகள் ஏற்பாடு செய்த பாராட்டு விழாவொன்று கொழும்பில் பிரபல ஹோட்டலொன்றில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு நாட்டின் முன்னணி சட்டத்தரணிகள், அரசியல் பிரமுகர்கள் வருகை தந்திருந்தனர்.

அநேகருடன் ரணில் விக்கிரமசிங்க நெருங்கியிருந்து பேசியதை அவதானிக்க முடிந்தது. ரணில் விக்கிரமசிங்கவுக்கு அருகிலிருந்த சிலரைப் பார்த்துவிட்டு கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தனவிடம் கட்சி ஆதரவு சட்டத்தரணிகள் வெளியிட்டுள்ளனர். ஜனாதிபதி அவர்களிடம் எங்களுக்குச் செல்ல முடியாது. பாருங்கள் அவரை சுற்றியிருப்பவர்கள் எல்லாம் அவருக்கு எதிரானவர்கள் என ஐ.தே.க. சட்டத்தரணி ஒருவர் ருவனிடம் தெரிவித்தார். அதற்கு சிரித்துக் கொண்டு பதிலளித்த ருவன் விஜேவர்தன ஆமாம் அதுதான் எமக்குக் கிடைத்திருக்கும் வெற்றி என்று தெரிவித்தார். அங்கு கூடியிருந்த பெரும்பாலான சட்டத்தரணிகள் ஜனாதிபதியுடன் புகைப்படமெடுக்க ஆர்வம் காட்டினார்கள். அநேகர் ஜனாதிபதியுடன் செல்பி எடுத்தார்கள். ஜனாதிபதி அங்கே வருகை தந்திருந்த ஒவ்வொருவருடனும் நேரடியாகச் சென்று உரையாடினார். அரகலை போராட்டத்துக்கு ஆதரவு வழங்கிய சட்டத்தரணிகளும் அங்கே இருந்தார்கள்.

இதோ இங்கிருப்பது எங்கள் நண்பர்கள் என்று பொதுஜன பெரமுன சட்டத்தரணி ஒருவர் கூறும் பொழுது, ரணில் மிக நல்லது. எங்களுக்கு இப்போது இருப்பது அனைவரும் ஒன்று சேர்ந்து நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதாகும். அப்போது அங்கிருந்த எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள். இலங்கை பல்கலைக்கழமொன்றில் இருந்து உருவான ஜனாதிபதி ரணில் என்று ஐ.தே.க. தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

வரவு - செலவு திட்டத்தின் இறுதி வாரம் வியாழனுடன் முடிவுற்றது. ஜனாதிபதி இம்முறை கூடுதலான நேரம் விவாதத்தில் பங்கு பற்றினார். ஜனாதிபதியொருவர் விவாதத்தில் இவ்வளவு நேரம் பங்கு பற்றியது இதுவேயாகும்.

குடந்த திங்களன்று பாராளுமன்றத்துக்கு ஜனாதிபதி வருகை தந்திருந்த போது அவரது அலுவலகத்துக்கு பலரும் வருகை தந்து அந்த தேவைகளை தெரிவித்து வந்தனர். ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க எம். பிக்களது பிரச்சினைகளுக்கு துரிதமாக தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தார். எம்.பிக்கள் பாராளுமன்ற நாட்களில் ஜனாதிபதியின் அலுவலகத்துக்கு வருவது ஜனாதிபதி அல்லது அவரது செயலாளர் சமன் எக்கநாயக்க இருந்தால் மட்டுமே. அத்தினம் மாலை முன்னாள் பிரதம நீதியசர் அசோகடி சில்வாவின் சட்டத்தரணியாக ஐம்பது வருடம் நிறைவு செய்யுமுகமாக கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்தில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வொன்றில் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

முன்னாள் பிரதம நீதியரசர் அசோகடி சில்வாவும், ஜனாதிபதியும் சமகால வகுப்புத் தோழர்கள். பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, சட்டமா அதிபர் உட்பட மூத்த சட்டத்தரணிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

சட்டத்தரணிகள் அல்லாத வேறு எவரும் இதில் கலந்து கொண்டிருக்கவில்லை. ஒரு சட்டத்தரணிகளுடைய ஒரு கலகலப்பான ஒன்று கூடலென இது வர்ணிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செவ்வாயன்று பல நிதி நிறுவனங்களின் முக்கியஸ்தர்களோடு கலந்துரையாடினார். சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெறுவது தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டது. பிரதமர் தினேஷ் குணவர்தனவும் இதில் கலந்து கொண்டிருந்தார்.

வெற்றிகரமாக இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் நிதி நிலை தொடர்பாக பல முக்கியமான தீர்மானங்கள் இக்கூட்டத்தில் எடுக்கப்பட்டிருந்தன. ஜனாதிபதி இங்கு தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக சமூக ஊடகங்களிலும் தவறான கருத்துக்கள் வெளியிடப்பட்டது தொடர்பாக ஐ.தே.க. தவிசாளர் வியாழக்கிழமை பாராளுமனறத்துக்கு ஜனாதிபதி வருகை தந்திருந்தபோது அது பற்றி வினவினார். பொருளாதார சீர்த்திருத்தம் தொடர்பாக உங்களுக்கும், அரசாங்கத்துக்கும் திட்டங்கள் இல்லையென நீங்கள் கூறினீர்களா என வஜிர ரணிலிடம் கேட்டார்.

அதற்குப் பதிலளித்த ரணில் ஆம், ஏன் என்று கேட்டார். ஜனாதிபதியின் ஆலோசகர் அசு மாரசிங்கவும் இந்தக் கலந்துரையாடலில் சம்மந்தப்பட்டு ஏன் இவ்வாறு கூறினீர்கள் என்று கேட்டார். மறுசீரமைப்புச் செய்யும் நிலையில் பொருளாதாரம் இல்லை. இப்போது நாட்டிற்குத் தேவைப்படுவது புதியதொரு பொருளாதாரம். நுான் அதைச் சொல்லிவிட்டு நாட்டக்கு புதியதொரு பொரளாதாரத்தை கட்யெழுப்புவதாக ரணில் சிரித்துக் கொண்டே கூறினபார்.

ஜப்பான் இலகு புகையிரத சேவை பற்றி இராஜாங்க அமைச்சர் சாமர சம்மத் ஜனாரிபதியிடம் கேள்வியெழுப்பினார். ஜப்பான் இலகு புகையிரத செவையை கைவிடட்டதன் காரணமாக 567 மில்லியன் டொர் நஷ்டமேற்பட்டிருப்பதாக கணக்காய்வு அறிக்கை தெரிவிக்கின்றது. இதற்குப் பதலிளித்த சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, நான் ஜப்பான் சென்றிருந்த போது இது பற்றி பேசினேன். அவர்கள் இதனை மீண்டும் தருவதற்கு தயார் என்று தெரிவித்தார்.

வியானழனன்று பாராளுமன்றத்தில் நிதியமைச்சின் குழுநிலை விவாதம் இடம்பெற்றது. ஜனாதிபதி இவ்விவாதத்தில் உரையாற்றியபோது, பொருளாதார நெருக்கடிகள் பற்றி தெரிவித்தார்.

இதேதினம் அரசாங்க தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்தித்து வரவு செலவு திட்ட வாக்கெடுப்பு தொடர்பாக கலந்துரையாடினர். வாக்கெடுப்பில் வெற்றி பெறுவதற்கான வழிமுறைகள் பற்றியும் பேசினார்கள். பாராளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறும் ஒரு ஜனாதிபதி என்று ஜனாதிபதியின் செயற்பாடுகள் நிரூபிப்பதாக அங்கிருந்த ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி பிரித்தானிய பிரதி உயர்ஸ்தானிகர் திருமதி லிசா டன்ஸ்டாலை கடந்த புதனன்று ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து உரையாடினார். காலநிலை மாற்றம் தொடர்பான முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடியதோடு, அடுத்த பெப்ரவரி மாதம் நடைபெறவிருக்கும் 75 ஆவது சுதந்திர தின கொண்டாட்டம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. தனது நாடு இந்த விழாவை வெற்றிகரமாக நடாத்த முழுமையான உதவிகளை வழங்குவதாக பிரதித் தூதவர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

மின்சார கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பாக இவ்வாரத்தில் கூடுதாக பேசப்பட்டது. மின்சக்தி எரிபொருள் அமைச்சர் காஞ்சன விஜேசேகர மின்கட்டணம் கட்டாயமாக அதிகரிக்கப்படவேண்டுமென வாதாடி வருகிறார். அதேநேரத்தில் பொதுமக்கள் ஆணைக்குழு அதற்கு பலத்த எதிர்ப்பை தெரிவித்து வருகின்றது. ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க இம்மின்கட்டணத்தை அதிகரிக்கும் அதிகாரம் தமது அமைப்புக்கே உள்ளது என்று தெரிவித்து வருகிறார். அமைச்சுக்கும் ஆணைக்குழுவுக்கும் இடையிலே ஒரு பணிப்போர் இடம்பெற்று வருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க வியாழனன்று பாராளுமன்றத்தில் ஆணைக்குழுவின் தலைவரை கடுமையாக விமர்சித்ததோடு, அவரை விரைவில் சந்திக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். அவர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு பபாராளுமன்றத்துக்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் மின்கட்டணத்தை உயர்த்தாவிடின் அடுத்த வருடத்தில் இருந்து ஆறு மணி முதல் 08 மணி நேரம் வரை மின் வெட்டு அமுல்படுத்தப்படவேண்டியேற்படும் என மின்சக்தி எரிபொருள் அமைச்சர் காஞ்சனே விஜேசேகர தெரிவித்தார். இப்போது இது பெரும் விவாதமாக இருக்கிறது. ஜனாதிபதியின் உரையின் படி மின்கட்டண அதிகரிப்பு நிச்சயமாக இடம்பெறும் என்று எதிர்பார்க்கக்கூடியதாக உள்ளது.

### ஜி.எல். பிரிஸின் இடதுக்கு புதிய ஒருவரை நியமிப்போம்.

மொட்டுக் கட்சி செயலாளர்

இவ்வாரத்தில் இடம்பெற்ற இன்னுமொரு முக்கிய அரசியல் நிகழ்வு மொட்டுக் கட்சியிலிருந்து பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நீக்கப்பட்டதாகும். மொட்டுக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் அதனை உறுதிப்படுத்தினார். பேராசிரியர் ஜி.எலர்.பீரிஸ் தலைமையிலான மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் பலர் சுதந்திர பாராளுமன்ற உறுப்பினர் குழு என்ற புதிய அமைப்பொன்றை உருவாக்கியிருக்கிறார்கள். டலஸ் அழகப்பெருமவுடன் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் உட்பட உறுப்பினர்கள் பலரும் இணைந்துள்ளனர்.

மிக விரைவில் ஜி.எல.பீரஸ் இடத்துக்கு புதிய ஒருவரை நியமிக்கவிருப்பதாக சாகர காரியவசம் தெரிவித்தார்.

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2022 DECEMBER 11 - SUNDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

## முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பான சீர்திருத்தங்களில் சமூகத்துக்குள் இணக்கப்பாடு வரவேற்கத்தக்கது

இலங்கை முஸ்லிம் சமூகத்தில் முக்கிய பேசு பொருளாக இருந்த, முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பில், முக்கிய தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளது.

முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்திருத்தங்கள் தொடர்பான இறுதித்தீர்மானம் எட்டப்பட்டு, சட்டவரைஞர் திணைக்களம் நகல் சட்ட வரைபினையும் தயாரித்து, இச்சட்ட–வரைபு நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட–வுள்ளது.

இதுதொடர்பில் அடுத்தக்கட்ட நகர்வுகள் தொடர்பில் ஆராய்வதற்காக, பாராளு–மன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் பாராளு–மன்ற உறுப்பினர்களை நீதி சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அரசியல் சீர்திருத்த அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ 08.12.2022 அன்று பாராளுமன்றில் சந்தித்து முக்கிய கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது காதி நீதிமன்றங்கள் தொடர்ந்து செயற்படும், பலதார திருமணத்திற்கு அனுமதி, முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்ந்து அமுலில் இருக்கும், சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என இருதரப்புக்கிடையிலான இந்தக் கலந்துரையாடலில், இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

முஸ்லிம் சமூகத்தில் பல்வேறு வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருந்த, முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்திருத்தங்கள், தற்போது ஒரு முக்கிய கட்டத்தை நெருங்கியுள்ளதாக நாம் எண்ணுகிறோம்.

குறித்த முக்கிய கட்டம், ஏற்படுவதற்காக தமது பங்களிப்பை வழங்கிய, சகல தரப்பினரும் இங்கு பாராட்டப்பட வேண்டியவர்கள்.

முஸ்லிம் அரசியல்வாதிகளில் அநேகர், இதுதொடர்பில் ஒருமித்த நிலைப்பாட்டில் இருந்தமையும், இஸ்லாமிய சட்டங்கள் ஓரங்கட்டப்பட்டு, முஸ்லிம் தனியார் சட்டங்கள் அழிக்கப்பட்டு, விடக்கூடாதென்பதிலும் அவர்களுக்கிருந்த ஆர்வம் போற்றத்தக்கது.

முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு ஒற்றுமையுடன் செயற்பட்டது போன்று, முஸ்லிம் சமூகம் சார்பிலான ஏனைய விடயங்களிலும் ஒற்றுமையுடனும், கட்டுக் கோப்புடனும் செயற்பட வேண்டுமென முஸ்லிம் சமூகம் எதிர்பார்க்கிறது.

புதிய அரசியலமைப்பு வரைவு, தேர்தல் மறுசீரமைப்பு, எல்லை நிர்ணயம், இனப்பிரச்சினைக்கான தீர்வு, காணி விவகாரம், வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம், இஸ்லாமிய புத்தகங்கள் இறக்குமதியில் நீடிக்கும் கட்டுப்பாடுகள், அப்பாவி முஸ்லிம்கள் சிறையில் விசாரணையின்றி வாடுவது, போதைப் பொருளுக்கு எதிரான போரட்டம், என பல முக்கிய விவகாரங்கள் முஸ்லிம் சமூகத்திற்கு நெருங்குவாரங்களை ஏற்படுத்தியுள்ளன.

எனவே, முஸ்லிம் அரசியல்வாதிகள் இதுதொடர்பில், தமது சிறப்புக் கவனத்தை இங்கு குவிப்பது பிரதானமாகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# டிலான் பெரேரா ஒரு முஸ்லிம் என்கிறார் பதுளை இமாம்

### மரணிக்கும் வரை ஸ்ரீலங்கா சுதந்திக் கட்சியை விடமாட்டேன் என்கிறார் சந்திரிக்கா

அண்மைக் காலமாக சர்ச்சைக்குள் சிக்கியிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமார துங்கவை கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசினே நீக்கியமை பரபரப்பாக பேசப்படுகின்றது.

தன்னை கட்சியிலிருந்து நீக்கியமை தொடர்பாக அறிக்கையொன்றை விடுத்துள்ள சந்திரிக்கா அம்மையார், தான் ஐக்கிய மக்கள் சக்தியிலோ, ஐக்கிய தேசியக் கட்சியிலோ இணைந்து செயற்படப் போவதாக பரப்பப்படும் செய்திகளில் உண்மையில்லை எனத் தெரிவித்தார். தான் பிறந்ததும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தான். தானே கட்சிக்காக பல சவால்களை எதிர்கொண்டவளும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

டலஸ் அழகப் பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை பதுளை மாவட்ட மாநாடு இவ்வாரத்தில் இடம்பெற்றது. இந்த மகாநாட்டை கட்சி முக்கியஸ்தரான முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா ஏற்பாடு செய்திருந்தார். உறுப்பினர்கள் எல்லோரும் பஸ் ஒன்றிலேறி பதுளைக்குச் செல்ல முற்பட்ட போதும் நான்கு பேர் மட்டுமே அதில் இருந்தனர். டலஸ் அழகப்பெரும, உதய நிரிலிகொட, திலக் ராஜபக்ஷ மற்றும் லலித் எல்லாவல ஆகியோர் பஸ்ஸிலே பதுளைக்குச் சென்றனர். ஏனையோர் தமது சொந்த வாகனங்களிலே சென்றார்கள். இவர்கள் எல்லோரும் எல்ல பிரதேசத்திலே இருக்கின்ற ஹோட்டலொன்றில் தங்கினார்கள். தமிழ் கலாச்சாரப்படி இவர்கள் அங்கு வரவேற்கப்பட்டார்கள். குளிர் காலநிலை காரணமாக டிலன் பெரேரா விருந்துபசாரமொன்றையும் ஏற்பாடு செய்திருந்தார். அடுத்த நாள் காலை உதயன்கல ரஜமகாவிகாரையில் நடைபெற்ற சமய நிகழ்வோடு ஆரம்பிக்கப்பட்ட கட்சியின் பதுளை மாவட்ட நிகழ்வு சர்வ மத நிகழ்வுகளுடன் இடம்பெற்றது. பதுளை ஜும்ஆப் பள்ளிவாசலுக்கும் இவர்கள் விஜயம் செய்தனர். பதுளை ஜீம்ஆப் பள்ளிவாசலின் மௌலவி ஒருவர் ஆசிர்வாதிக்கும் பிரார்த்தனை நடாத்தினார். குறிப்பாக டிலான் பெரேராவைப் பற்றி டிலான் பெரேரா விருத்தசேதனம் தவிர எல்லா வகையிலும் முஸ்லிமாக இருக்கிறார்கள் என்று பதுளை பள்ளி இமாம் கூறினார். அவர் இரண்டு மூன்று பேரை திருமணம் செய்திருக்கிறார் என்றும் சிரித்துக்கொண்டே இமாம் கூறினார். அதன் பிறகு தொழில் சார் உத்தியோகத்தர்களுடன் டிலான் பெரேராவின் மனைவியும் இக்கூட்டத்துக்கு வந்திருந்தார். இந்தக் கூட்டத்துக்கு தனது மனைவி வருவதனை டிலான் பெரேரா அறிந்திருக்கவில்லை. நான் லண்டன் செல்கின்றேன். நீங்கள் பதுளை போங்கள் என்று தெரிவித்திருந்தார். அவர் ரகசியமாக பதுளைக்கு பஸ்ஸில் வந்திருந்தார். டிலானின் மனைவி ஐக்கிய மக்கள் சபையில் மொட்டுக்கட்சியின் கொந்துராத்து ஒன்றை நிறைவேற்றுகின்றதா என்ற கேள்வி எழுப்பினார். அவ்வானதொரு கொந்தராத்து ஒன்றை நிறைவேற்றப் போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சரித்த ஹேரத் தெளிவுபடுத்தினார். தனது மனைவியின் பிரச்சினையினால் டிலான் பெரேரா கோபமுற்ற போதும் அதனை கட்டுப்படுத்திக் கொண்டார். கூட்டத்தின் பிறகு இராப்போசன விருந்தொன்று நடைபெற்றபோது டிலான் பெரேராவை கேலிக்குள்ளாக்கினார்கள். உங்களுக்கும், மனைவிக்குமிடையில் ஒரு நாடகம் இடம்பெற்றது. ஊடகம் அதனை பெருப்பித்துக் காட்டுகின்றது. உறுப்பினர்கள் குறிப்பிட்ட அந்த கூற்றினை பாராளுமன்ற உறுப்பினர் நிராகரித்தார்.

பதுளை மாவட்ட கட்சி செயற்பாட்டாளர்களின் கூட்டம் அடுத்த நாள் இடம்பெற்றது. வாகன அணிகளை கொண்ட ஊர்வலத்தோடு கூட்ட மண்டபத்துக்கு உறுப்பினர்கள் அழைத்து வரப்பட்டார்கள். மண்டபம் ஆதரவாளர்களால் நிரம்பி காணப்பட்டது. இக்கட்சியில் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் 13 பேரின் படங்களை உள்ளடக்கிய கலண்டறொன்றும் வழங்கப்பட்டது.

இதன்போது டலஸ் அழகப்பெரும பழைய நினைவொன்றையும் நினைவுபடுத்தினார். நான் நேற்று பதுளைக்கு வரும் பொழுது பிரதீபா கூறினார்கள். டிலான் உங்களுக்கு பரிசொன்றை தருவார் என்று.








# லிங்கன் பல்கலைக்கழகம் மலேசியா, இலங்கையர்களுக்கு வழங்கும் வாய்ப்புகள்

ஆபிரகாம் லிங்கன் பல்கலைக்கழகங்களின் மலேசிய நிறுவனமாக விளங்கும் லிங்கன் பல்கலைக்கழகம் (LC) உலகளாவிய சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுகிறது. இப்பல்கலைகழகம் 2017 இல் மலேசியாவின் உயர்கல்வி அமைச்சகத்தால் 5 நட்சத்திர தரவரிசையைப் பெற்றது மாத்திரமன்றி ISO 9001:2015 சான்றளிக்கப்பட்ட கல்வி நிறுவனமாகவும் திகழ்கின்றது. இது தவிர, மேலும் “கொமன்வெல்த் பல்கலைக்கழகங்களின் சங்கத்தின் (ACU)” இணை உறுப்பினராகவும் உள்ளது. லண்டன், உறுப்பினர் “சர்வதேச பல்கலைக்கழகங்களின் சங்கம் (AIU)” - பாரிஸ், “உலக சுகாதார அமைப்பின் (WHO)” உறுப்பினர், என்பதோடு இலங்கையின் பல்கலைக்கழக மானியக் குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை மருத்துவ சங்கம் (SLMC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டியலின் கீழ் டுஊ பட்டியலிடப்பட்டுள்ளது. டைம்ஸ் உயர்கல்வி அவர்களின் 2021 உலக பல்கலைக்கழக தாக்க தரவரிசை மற்றும் 2023 ஆசியாவில் QS தரவரிசை 251 இல் இது 35+ இல் வைக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் இளங்கலை மற்றும் முதுகலை திட்டங்களை வழங்கும் 30 நாடுகளில் செயல்படுவதோடு மட்டுமன்றி தற்போது 30000+ மேற்பட்ட இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் தங்கள் கல்வியை உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் படிக்கின்றனர். 2500+ மேற்பட்ட கல்விசார் ஊழியர்கள் உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் உள்ள கல்வி நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இன்றைய நிலவரப்படி, கடந்த 2 தசாப்தங்களாக இப்பல்கலைக்கழகம் 100,000 பட்டதாரிகளையும் டிப்ளோமாதாரர்களையும் உருவாக்கியுள்ளதோடு மருத்துவம், பொறியியல், முகாமைத்துவம், நிதி, சமூக அறிவியல், மனிதநேயம், விருந்தோம்பல், சுற்றுலா, கட்டிடக்கலை, பில்ட் சுற்றுச்சூழல், பல் மருத்துவம் மற்றும் கணினி அறிவியல், மல்டிமீடியா ஆகிய



துறைகளில் டிப்ளோமா முதல் முதுமானி வரையிலான தகுதிகளை வழங்க இந்த பல்கலைக்கழகம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. லிங்கன் பல்கலைக்கழகம் வழங்கும் தகுதிகள், உலகக் கல்விச் சேவைகள் (WES - கனடா), NARIC UK மற்றும் VETASSESS - அவுஸ்திரேலியா போன்ற தரப்படுத்தல் அமைப்புகளுடன் உள்நாட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

2000க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கக்கூடிய நவீன வகுப்பறைகள், விசாலமான சிற்றுண்டிச்சாலை பொறியியல், உயிர் விஞ்ஞானம் மற்றும் கணினி அறிவியலுக்கான ஆய்வகங்கள், உள்ளிட்ட அனைத்து நவீன வசதிகளுடன் மாணவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தை அனுபவிக்க ஒரு பொழுதுபோக்கு அறை மற்றும் வெளிப்புற விளையாட்டு அரங்கம் போன்ற நவீன வசதிகளுடன் கொழும்பின் வர்த்தக மையத்தில் 4 ஏக்கர் பரப்பளவில் நவீன கட்டிடத்தில் அமைந்துள்ள மிகப்பெரிய தனியார் கல்வி நிறுவனமாகும்.

லிங்கன் பல்கலைக்கழகம் “அனைவருக்கும் கல்வி” என்ற உண்மையான எண்ணக்கருவை நம்புவதோடு இளங்கலை மற்றும் முதுகலை கல்லிக்கான பரந்த தெரிவுகளையும் வழங்குகிறது. அனைத்து கற்கைநெறிகளையும் இலங்கையிலோ அல்லது மலேசியாவிலோ குறைந்த கட்டணக் முறையில் பின்பற்றலாம். இந்த காலத்தில், மாணவர்கள் அனுமதிக்கான சிறப்பு சலுகைகள் மற்றும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து மற்றும் அமெரிக்காவிற்கு கடன் பரிமாற்ற விருப்பங்களுடன் உதவித்தொகைகளையும் அனுபவிக்க முடியும்!

2022 ஆம் ஆண்டில், இலங்கை மாணவர்கள் மலேசியாவில் ஆனு திட்டத்தைத் தொடர 50மூ நிதியுதவியைப் பெற்றனர். மற்றும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு இன்னும் சில வேலைவாய்ப்புகள் உள்ளன. மேலும் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் மருத்துவ மாணவர்கள் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதற்கான வழிகாட்டுதலையும் பல்கலைக்கழகம் வழங்குகிறது.

லிங்கன் பல்கலைக்கழகத்தில் சேரும் எந்தவொரு மாணவருக்கும் உள்ளூர் மற்றும் சர்வதேச அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் தரமான கற்றல் அனுபவத்தை வழங்குகிறார்கள். மேலும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக அடிப்படை கற்கை திட்டம், க.பொ.த. சா/த பரீட்சைக்குப் பிறகு உயர்தரத்தை அடையும் இலக்கை இளைஞர்களுக்கும் விரைவான பாதையில் ஊக்கமளிக்கின்றது!

மேலும் லிங்கன் பல்கலைகழகமானது, புலமைப்பரிசில்களுடன் கலாநிதிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பல அறிஞர்களுக்கு ஆராய்ச்சியில் இறங்குவதற்கு உதவிய ஸ்ரீ லங்கா அறக்கட்டளை (SLF) போன்ற கௌரவமிக்க அரச நிறுவனங்கள் பலவற்றில் முதன்மையானது. மேலும், தனியார் மற்றும் பொது நிறுவனங்களுடனான எங்களது ஒத்துழைப்பு, ஆயிரக்கணக்கான இலங்கை மாணவர்களுக்கு சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தகைமையை குறைந்த விலையில் படிக்க உதவியுள்ளது. அரசாங்க தாதி உத்தியோகத்தர் சங்கம், இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் (PHIs) ஒன்றியம், இலங்கை அரசாங்க மருந்தாளுநர் சங்கம், இலங்கை அரசாங்க கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம், மருத்துவ ஆய்வக விஞ்ஞானக் கல்லூரி (MLT) மற்றும் சுகாதார நிபுணர்களின் கல்வியகம் ஆகியவற்றுடன் இணைந்து செயற்பட்டது மாத்திரமன்றி சர்வதேச தரத்திற்கு இணையாக தங்கள் தகுதிகளை மேம்படுத்த சுகாதார அமைச்சகத்துடன் இணைக்கப்பட்ட ஊழியர்களுக்கு உதவியிருக்கிறது.

இலங்கை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் மாலைத்தீவில் உள்ள லிங்கன் பல்கலைக்கழக நடவடிக்கைகளை வழிநடத்தும் பணிப்பாளராகிய டாக்டர் ரோஷன் டி. லிமா “ஒரு சிறப்பான கல்வியாளர் என்ற வகையில், எங்கள் அடுத்த தலைமுறைக்கு நாங்கள் வழங்கக்கூடிய முக்கிய வழிகாட்டுதல் என்னவெனில், தொழில் ரீதியாகத் தகுதியான நபர்களை ஒழுக்கமான சூழலில் உருவாக்குவதாகும்” என்கிறார். மேலும் அவர் கூறுகையில், “இந்த சிந்தனையின் வரிசையில், ஜனாதிபதி, பேராசிரியர் டாக்டர் அமியா பௌமிக் மற்றும் சார்பு அதிபர் டத்தோ டாக்டர் ஹெச்ஜே ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இலங்கையர்களாகிய எமக்கு விசேடமாக உதவுவதற்காக தொற்றுநோய் மற்றும் தொற்றுநோய்க்குப் பிற்பட்ட காலத்தில் முன்வைக்கப்பட்ட சவால்களுக்கு மத்தியிலும் கல்வி மற்றும் தொழில் இலக்குகளைப் பாதுகாப்பதற்கான பல்வேறு வழிகளைத் உருவாக்கிய, பல்கலைக்கழகத்தின் பீபி புளோரினா பின் அப்துல்லாஹ் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஆசிரிய பீடாதிபதிகள் மற்றும் செவிலியர், பல் மருத்துவம், மருத்துவம், முகாமைத்துவம் மற்றும் சமூக அறிவியல் ஆகிய பிரிவுகளின் துணை பீட உறுப்பினர்களால் அந்தந்த துறைகளில் நிபுணர்களால் வழிகாட்டப்படும் அதிர்ஷ்டம் பெற்ற எங்கள் மாணவர்களுக்கு அளிக்கும் மகத்தான ஆதரவிற்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு டத்தோ டான் யாங் தாய் உயர் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் மாணவர்களின் தேவைகளுக்கு உடனடி பதில் அளித்ததற்காக எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

சிறந்த ஜனாதிபதியாக செயற்பட்ட ஆபிரகாம் லிங்கனின் தொலைநோக்கு பார்வையை உண்மையாக பின்பற்றுபவர்கள் என்ற வகையில், கடந்த பத்து வருடங்களாக இலங்கையில் மாத்திரமன்றி உலகின் ஏனைய பாகங்களிலும் தொழில் வல்லுநர்களாக ஆயிரக்கணக்கான மாணவர்களின் கனவுகளை நனவாக்குவதற்கு நாம் உதவி செய்து வருகின்றோம். எங்களுடன் பயணித்த பல மாணவர்கள் தற்போது அவுஸ்திரேலியா, கனடா, ஜப்பான், நியூசிலாந்து, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் குடியேறியுள்ளனர். அவர் மேலும் உறுதியளித்து, “உண்மையான இலங்கையர்களாகிய நாம் அனைவரும் மரபுரிமையாகக் கொண்டிருக்கும் கலாச்சார மற்றும் பாரம்பரிய விழுமியங்களைப் பாதுகாக்கும் அதே வேலையில், லிங்கன் பல்கலைக்கழகம் முழுமையான கல்விப் பொதியை வழங்குகிறது”.

சிறந்த கல்வி அனுபவத்தின் மூலம் உலகை வெல்வதற்கு எங்கள் மாணவர்களுக்கு வழிகளை ஏற்படுத்தி கொடுப்பதோடு மட்டுமன்றி, எதிர்காலங்களில் பல வெற்றிகளை உருவாக்க லிங்கன் பல்கலைக்கழகம் செயற்படுகின்றது.

ஒரு முழுமை பெற்ற வெற்றிகரமான கல்வி அறிவினை பெற்றுக் கொள்ள எங்கள் அதி நவீன கல்வி நிறுவனமான லிங்கன் குடும்பத்தில் இணையுங்கள்.

மேலதிக விரபங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்.
**டாக்டர். ரொஷன் டீ லீமா**
**தொலைபேசி : 071-79 772 771**
**மின்னஞ்சல்** - info@lincoln.edu.my
**இணையத்தளம்** -
www.lincoln.edu.lk





எம்.எஸ். அமீர் ஹுசைன்

# கஞ்சாவால் டொலர்?

# விசித்திர முயற்சியில் பொருளாதார இலக்கு!



இலங்கை பாராளுமன்றத்தில் அடிக்கடி கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகி அமெரிக்க பிரஜா உரிமை பெற்றவர் என்பது முதலாவது விடயமாகும். அண்மையில் நிறைவேற் றப்பட்ட அரசியல் அமைப்புக்கான 21 ஆவது திருத்தின்படி இரட்டை பிரஜா உரிமை உள்ளவர்கள் இலங்கை பாராளுமன்றத்தில் உறப்பினராக பதவி வகிக் முடியாது என்பதால் டயனா கமகே அவரது இரட்டை பிரஜா உரிமையை இதுவரையில் இரத்து செய்ததால் அவரை பாராளுமன்றத்தில் இருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

ஆண்மையில் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பேசிய கொழும்பு ஏற்ற வகையில் தலைநகரமான கொழும்பை கவர்ச்சியான உள்ளாச புரியாக மாற்றியமைக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் இரவு நேர கழியாட்டங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை அண்மையில் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பேசும் போது அவர் வலியுறுத்தினார்.

குறிப்பாக உள்ளாசப் பிரயாணிகளை கவரும் வகையில் கெசினோ, தாய்லாந்தில் இருப்பது போன்ற சிவப்பு விலக்கு பிரதேசம் என்றலெல்லாம் இலங்கையில் இருக்க வேண்டும். தாய்லாந்து போன்ற உள்ளாசப் பிரயாணத்துறை சமூக சீர்கேடுகள் தென்பகுதி கரையோரங்களில் மழிந்து காணப்படுவது பாரிய கலாச்சார சீரழிவாக இருந்து வருகின்ற நிலையில் தான் டயனா கமகே பிரதி அமைச்சர் இவை அனைத்தையும் சட்டபூர்வமானதாக்கி உள்ளாசப் பிரயாணிகளுக்காக திறந்து விட வேண்டும் என்று கோரி வருகின்றார். அவர்கள் சுதந்திரமாக அனைத்தையும் இங்கு அனுபவிக்க அனுமதி வழங்கப்பட்ட இடமாக மாற்றியமைக்க வேண்டும். அப்போதே நாடு பொருளாதார சுபீட்சத்தை அடையும் என்பது டயனாவின் கருத்தாக இருந்து வருகின்றது.

டயனாவின் அடுத்த கவர்ச்சியை ஏற்படுத்தியுள்ள விடயம் இலங்கை கஞ்சாவை ஏற்றுமதி செய்யும் நாடாக மாற வேண்டும். கஞ்சா பயிரிடலை சட்டரீதியாக்க வேண்டும். அதன் மூலமும் ஏராளமான அமெரிக்க டாலர்களை இலங்கை பெற்றுக் கொள்ள முடியும் என்ற கருத்தையும் அவர் முன்வைத்து வருகின்றார். அவர் இந்த கருத்தை ஏற்கனவே கோதாபய தடை செய்தனர். இலங்கைக்கும் இந்த கஞ்சா எண்ணை வளம் போன்றதே என்று டயனா வாதிடுகின்றார்.

இந்த கஞ்சா ஏற்றுமதிக்கு மட்டுமாவது சட்டரீதியானதாக மாற்றப்பட்டால் ஏற்கனவே கஞ்ஜாவை சட்டரீதியற்ற போதைப் பொருளாக தடை செய்திருப்பதை தளர்த்த வேண்டிய நிலை ஏற்படுகின்றது. தற்போது ஆயுள்வேத மருத்துவ தேவைக்கு மாத்திரம் பயன்படுத்தும் அனுமதி வழங்கப்படும் நடைமுறை இருந்து வருகின்றது. ஆனாலும் டயனாவின் தேவைக்கு ஏற்ப அமெரிக்க டாலரை உழைப்பதற்காக இலங்கையில் பரவலாக பயிரிட்டு ஏற்றுமதி செய்யும் போது சர்வசாதாரணமாக கஞ்ஜாவும் ஒரு புகைத்தலாக மாத்திரமே வரும் போது அதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலை ஏற்பட்ட இருக்கின்றது.

ஏற்கனவே போதைப்பொருள் பாவனை காரணமாக இளம் தலைமுறையினர் மிக மோசமாக பாதிக்கப்பட்டு வருகின்ற நிலையில் வரும் ஒரு பெண் பாராளுமன்ற உறுப்பினர் என்றால் அது டயனா கமகேயை தவிர வேறு யாரும் இல்லை. இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பு மிகவும் குறைவாக இருக்கின்ற நிலையில் ஒரு சிலரே ஒவ்வொரு பாராளுமன்றத்திற்கும் தெரிவாகி வருகின்றனர். ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் ஒருசிலர் அவரவர்களுக்கு கிடைக்கும் பதவிகளைக் கொண்டு விமர்சனங்களுக்கு உட்படாத வகையில் தன் வேலையை செய்து விட்டு போகின்றவர்களாகவே உள்ளனர். ஆனாலும் டயனா கமகே இந்த ஆட்சியில் உள்ளாசப் பிரயாணத்துறை பிரதி அமைச்சராக இருக்கின்றார் ஆனாலும் அவர் சமகி ஜனபலவேகய தேசிய பட்டியல் உறுப்பினராக பாராளுமன்றம் வந்தவராவார். எவ்வாறே எதிரணியில் இருந்து ஆளும் கட்சி பக்கம் மாறியவர் முன்னால் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ ஆட்சியில் அந்த அரசாங்கத்துக்குள் தமக்கென ஒரு ஸ்தீரமான இடத்தை பிடித்துக் கொண்டதால் புதிய ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்காவின் அரசாங்கத்திலும் அதே அமைச்சர் பதவியை தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

இப்போது அவர் பற்றி இரண்டு விடயங்கள் தொடர்பாக பேசப்பட்டு வருகின்றது. முதலாவது விடயம் அவரது இரட்டை பிரஜா உரிமை பற்றிய விடயமாகும். அவர் ஏற்கனவே பெசில் ராஜபக்ஷ, கோதாபய ராஜபக்ஷ போன்று மாவட்ட சமகி ஜனபலவேகய உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் தெரிவிக்கையில் அது தொடர்பாக நீதிமன்ற உத்தரவு விரைவில் வரும். அப்போது டயனா இலங்கை பிரசையா அல்லது அமெரிக்க பிரசையா என்பதை அறிந்து கொள்ள முடியும் என்றார். அத்துடன் டயனாவுக்கு எதிரான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சவால் விடும் வகையில் பேசும் போது டயனா கமகேயின் கணவரின் அரசியல் கட்சியைக் கொண்டே சமகி ஜனபலவேகய என்ற கூட்டணி பதிவு செய்திருப்பதாக அதன் தலைவர் சஜித் பிரேமதாசாவுக்கு எதிராக கடுமையாக விமர்சிக்கும் வகையில் டயனாவும் பேசி வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

டயனா தொடர்பான கடுமையான விமர்சனங்களுக்கு காரணமான இரண்டாவது விடயம் அவர் வகிக்கும் பதவியை அடிப்படையாக வைத்து இலங்கை பொருளா தாரத்தை கட்டியெழுப்ப இலங்கையை உறங்காத நகரமாக மாற்றியமைக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து வருவதாகும். உள்ளாசப் பிரயாணிகளை கவர்ந்திழுப்பதற்கு இலங்கையில் போதுமான செயற்திட்டங்கள் இல்லை. அவர்கள் கொண்டு வருகின்ற அமெரிக்க டாலர்களில் அரைவாசியை தான் இங்கு செலவு செய்கின்றார்கள். மீதியை அவர்களது நாட்டிற்கு திருப்பி எடுத்துச் செல்கின்றார்கள். இங்கு வந்தால் எந்த டாலரும் மீதி இல்லாமல் அவர்களது நாட்டிற்கு திரும்பி போவதற்கு கொடிகட்டிப் பறக்கும் நாடுகளில் தெருத்தெருவாக விபச்சாரம் சட்டரீதியாக்கப் பட்டிருக்கின்றது. இலங்கை இறுக்கமான மத கலாச்சார பண்பாட்டு விழுமியங்களைக் கொண்ட நாடாகும். பௌத்த, இஸ்லாமிய, கிரிஸ்தவ கலாச்சார பண்பாடுகளுக்கமைய சூதாட்டம், விபச்சாரம் போன்ற அனாச்சாரங்கள் வெறுத்து ஒதுக்கப்பட்ட ஒரு நாடாக இருந்து வருகின்றது.

ஆனாலும் டயனா போன்ற உள்ளாசப் பிரயாணத்துறை பிரதி அமைச்சரின் கருத்துப்படி உறங்காத நகரத்தில் இலங்கை கலாச்சார பண்பாடுகள் அனைத்தும் உடைத்தெரியப்பட்டு அனாச்சாரம், முறைகேடுகள் நடைபெறும் இடமாக இலங்கை தேசம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதாக இருந்து வருகின்றது. இலங்கை இந்த நாட்டிற்கேயான கலாச்சார மரபுகள் பண்பாடுகளை புறக்கணித்து பொருளாதார மீட்சிக்காக நாடுகள் வெறுத்து ஒதுக்கும் அனாச்சாரங்களை சட்ட ரீதியாக்கி அதன் மூலம் இங்கு வரும் உள்ளாசப் பிரயாணிகளது பணப்பையை சூரையாட வேண்டும் என்பது புதிய சிந்தனையாக மாறி வருகின்றது.

ஏற்கனவே கடந்த காலங்களில் இந்த உள்ளாசப் பிரயாணத்தால் இந்த நாட்டின் கரையோர பிரதேசங்களில் கலாச்சார சீரழிவுகள் இடம்பெற்று வருவதாக குற்றம் சாட்டப்பட்டு வந்திருக்கின்றது. ஒருபால் உறவு (ஹோமோ செக்ஸ்) சிறுவர் துஷ்பிரயோகம், போதைப்பொருள் பாவனை போன்ற ராஜபக்சவின் ஆட்சியில் இருந்த போது முன்வைத்திருந்தார். 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட பிரேரணைகளில் ஒரு அம்சமாக ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா அதனை உட்படுத்தி இருந்தார். வரவு செலவுத் திட்ட யோசனைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போது கஞ்சாவின் ஆயுள் வேத பெயரான "திரய் லோக விஜய பஹூவாதினி" என்ற பெயரை குறிப்பிட்டு அதனை ஏற்றுமதி செய்வதற்கான பயிராக பயிரிடல் உட்பட ஏற்றுமதி செய்வது தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என்று கூறியதையும் நினைவுபடுத்தலாம்.

அவ்வாறாயின் டயனா கமகேயின் ஆலோசனை ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றது என்பது அர்த்தமாகும். இந்த கஞ்சா தொடர்பாக டயனா மிகவும் தாராள கருத்தை கொண்டுள்ளார். அண்மையில் இலத்திரனியல் ஊடகமொன்றிற்கு அவர் வழங்கி இருந்த செவ்வியில் தெரிவிக்கையில் இலங்கையில் மிகவும் தரமான கஞ்சா விளைகின்றது. அரபு நாடுகளுக்கு எண்ணை வளம் இருக்கின்றது. தென் ஆபிரிக்காவுக்கு தங்கம் இருக்கின்றது. சியரலியோன் நாட்டிற்கு இரத்தினம் இருக்கின்றது. அந்த நாடுகள் அவர்களது வளங்களை பயன்படுத்தி பொருளாதார சுபீட்சத்தை அடைந்து வருகின்றனர். ஏற்கனவே இலங்கையின் கஞ்சாவிற்கும் நல்ல சர்வதேச கிராக்கி இருந்து வந்ததாயினும் பிரித்தானியர் அதனை அவர்களது ஆட்சியில் பிரதி அமைச்சர் டயனாவின் அமெரிக்க டாலர் உழைக்கும் பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்தும் திட்டங்களால் இலங்கை எதை எயெல்லாம் கலாச்சார சீரழிவுகளாகவும் சமூக சீரழிவுக்கு காரணமானவைகளாக தடை செய்துள்ளாதோ அவை அனைத்தும் சட்டபூர்வமான வைகளாக மாறும் நிலை ஏற்பட இடமிருக்கின்றது. 1977 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே. ஆர். ஜேயவர்தனா அறிமுகம் செய்த திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக இந்த நாடு மிக மோசமாக பாதிக்கப்பட்டதாக இடதுசாரிகள் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

அதே போன்ற ஒரு விடயம் தான் உள்ளாசப் பிரயாணத்துறை பிரதி அமைச்சர் டயனா கமகேயின் தாராள உள்ளாசப் பிரயாணத்துறை கொள்கையும் அமைய இருக்கின்றது. டாலர் பற்றாக்குறைக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் தீர்வாக அனாச்சாரத்தை சட்டபூர்வமாக்குவதால் தற்போது நாடு அனுபவிப்பதை விட மிக மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பதில் சந்தேகம் இல்லை. அதனால் தீர்மானம் எடுக்கும் அரச உயர்மட்டம் இத்தகைய புதிய புரட்சி சிந்தனையால் சுவர்க்கபுரியாக இருந்து வரும் இலங்கை திருநாட்டிற்கு ஏற்படப்போகும் பாதிப்புக்கள், கலாச்சார சீரழிவுகள், நாசங்கள் பற்றியும் கவனத்தில் எடுக்க வேண்டும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# உணர்ந்து செயற்படும் உள்ளம்

பாதையில் நடந்து செல்லும் போது முன்னே அகப்படும் சிறிய கற்களை அல்லது அவை போன்றவற்றை கால்களால் தட்டி தள்ளிவிடப் பழகி இருக்கும் பலர் அதே பாதையில் துர்நாற்றம் தரும் ஒரு பொருளைக் கண்டதும் மூக்கைப் பொத்திக்கொண்டு கண்டும் காணாதது போல் சென்று விடுவதை அவ்வப்போது பார்க்கிறோம்.

மனிதருக்கு தொந்தரவாக அமையும் எதுவோ அதை அகற்றுவது அல்லது அகற்றுவதற்கு ஏற்பாடு செய்வது வணக்கத்தின் ஒரு கூறு என்பதை நாம் தெரிந்து வைத்திருக்கிறோம்.

நன்மை செய்வதற்கு இறைவன் தரும் ஒரு வாய்ப்பாகவே அதைக் கருதுகிறோம். இந்த அழகான வாய்ப்புகளை ஒரு போதும் தட்டிவிட மனதிற்கு இடமளிக்கவே கூடாது.

பாதையில் துர்நாற்றம் தரும் எதுவோ அதை கட்டாயம் அகற்ற வேண்டும் என்று ஒவ்வொருவரது உள்ளமும் உணரத்தான் செய்யும்.

சில உள்ளங்கள் அதை உணர்ந்த உடனேயே அடுத்து செய்ய வேண்டியதை செய்துவிடும்.

சில உள்ளங்கள் உணர்வோடு மட்டும் இருந்துவிடும்.

எமக்குத் தேவையானது உணர்வோடு உள்ள உள்ளங்களைக் காட்டிலும் உணர்ந்து செயல் மூலம் வெளிப்படுத்திக்காட்ட முட்படும் ஆக்கபூர்வமான உள்ளங்களாகும்.

எமது வீட்டுக்குள் ஒரு பிராணி இறந்து துர்நாற்றம் எடுக்க ஆரம்பித்தவுடனே அவசரமாக அதை தேடி கண்டுபிடித்து அந்த இடத்தை துப்பரவு செய்துவிடுகிறோம். அப்பொழுது சோம்பல் பார்ப்பதோ

மூக்கைப் பொத்திக்கொள்வதோ இல்லை.

ஆனால் பொது இடத்தில் இப்படியான ஒன்று நடந்துவிடும் போது மட்டும் நம்மில் ஆனேகர் மௌனம் காக்கிறோம். பொதுவேளை என்று வருகிறபொழுது,

"அவர் செய்யட்டும்..!",

"வேறு ஒருவர் செய்வார்..!"

என்று எண்ணி மற்றொருவருக்கு பாரத்தைச் சாட்டுகிறோம். மற்றவரும் இப்படியே நினைத்தால்

"எல்லோருடைய வேலை ஒருவருடைய வேலையாகவும் ஆகமாட்டாது".

பொதுப்பணி என்பது உள்ளங்களுக்கிடையில் நெருக்கத்தையும் சகோதர உணர்வையும் ஏற்படுத்தும் அழகான பணியாகும்.

அதன் துவக்கமும் முடிவும் வழிபாடாகும். வழிபாடு எங்கள் உள்ளங்களையும் நடத்தைகளையும் வளப்படுத்தும் ஆயுதமாகும். உள்ளங்களை இறைவனோடு நெருக்கமாக்குவதற்கான அழகான வாய்ப்புமாகும். பாதையில் இருக்கும் அசுத்தத்தை அகற்றுவது கூட ஒரு பொதுப்பணி.

ஒரு வகையில் மற்றவருக்குச் செய்கின்ற உதவி.

மற்றொருவகையில் சூழலுக்குச் செய்கின்ற நீதி.

பிள்ளைகளுக்கு படிப்பைக் கொடுத்து அறிவாளிகளாக ஆக்க அதிபிரயத்தனம் எடுப்பது போன்று இவ்வாறான பணிகளை செய்துகாட்டி, செய்யத்தூண்டி நல்ல பண்பாளர்காளக எமது பிள்ளைகளை உருவாக்க உறுதிகொள்வோம்.

# இலக்கிய பாகத்தில் மருதூர் ஐமால்தீன்



மஷூறா சுஹூர்டீன்ய

சாய்ந்தமருதைப் பிறப்பிடமாகவும்,ஏறாவூரை வசிப்பிடமாகவும் கொண்ட மருதூர் ஜமால்தீன், சாய்ந்தமருது றியாளுள் ஜன்னாஹ்,கல்முனை ஸ ாஹிறா கல்லூரி போன்றவற்றின் பழைய மாணவரான இவர், தர்ஹா நகர் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக்கலாசாலையில் கற்ற ஒரு மௌலவியுமாவார். ஏறாவூரில் மணவினை செய்து வாழும் இவர் ஏறாவூர் வாளியப்பா ஜூம்ஆ மஸ்ஜிதின் இமாமாக கடமையாற்றுகிறார். கவிதை, சிறுகதை,கட்டுரை,இஸ்லாமியப் பாடல்,பேச்சு என்பன இவரது துறைகளாகும்.

1981 ல் சாய்ந்தமருது இஸ்லாமிய இளைஞர் வட்டம் அமைப்பினூடே அல்ஹூதா என்ற கையெழுத்துச் சஞ்சிகையை வெளியிட்டதன்மூலம் இலக்கியத்துள் காலடி வைத்தார். 1984ல் தேசியப் பத்திரிகைகளில் எழுதவாரம்பித்தார். வீரகே சரி, தினகரன், சிந்தாமணி, மித்திரன், பாமிஸ், தினமுரசு போன்ற பல்வேறுபட்ட பத்திரிகைகளிலும், வானொலியில் இலக்கிய மஞ்சரி, இளைஞர் இதயம், வாலிப வட்டம்,ஒளி மஞ்சரி போன்ற பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளிலும் பிரகாசித்தவர்.

பிரதேசம், மாவட்டம், மாகாணம் எனப்பல்வேறு மட்டங்களில் இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்.

ஊவா வானொலி நெஞ்சம் மறப்பதில்லை நிகழ்ச்சியில் இவரை செவ்வி கண்டு கௌரவித்தது. தினக்குரல், வீரகேசரி, சுடரொளி போன்ற பத்திரிகைகளும் இவரை செவ்விகண்டு கௌரவித்தன.

பல நூல்களை இலக்கிய உலகிற்கு தந்திருக்கிறார். புரவலர் புத்தகப்பூங்கா வெளியீடாக 2008 ல் வெளியான தடயங்கள் கவிதைத் தொகுதியே இவரது முதலாவது வெளியீடாகும்.

தொடர்ந்து, ரமழான் வசந்தம்(2010), கிழக்கின் பெருவெள்ளக், காவியம் (2010), முஹம்மது (ஸல்) புகழ் மாலை (2011), இஸ்லாமிய கீதங்கள் (2012), தாலாட்டு (2015), பத்ர் யுத்தம் ஸ லவாத் மாலை (2016) வலிகள் சுமந்த தேசம் (2017), தீ நிலம் (2018), வல்லூரின் வானம் (2019), மனிதம் வாழும் (கி.மா.பண்பாட்டலுவல்கள் திணைக்கள வெளியீடு) எழுவான் கதிர்கள் 1986 வெளியிடப்பட்ட மேற்படி நூல்கள் தவிர, ஒரு கிராமத்தின் குரல் (நாட்டார் பாடல்கள்), உருவகக் கதைகள், நெறி தவறாதே (சிறுவர் கதைத் தொகுதி ), கொரோனா (குறுங்காவியம்.),திருப்பம் (சிறு கதைகள்.)போன்ற ஐந்து நூல்கள் வெளியீட்டிற்குத் தயாராக இருக்கின்றன.

அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் வரலாறு,1987) சாய்ந்தமருது வரலாறு,(2009) ஏறாவூர் வரலாறு,(2005) பெயர்பதிக்கும் தகைகள் விபரத்திரட்டு,(2022) புன்யாமீனின் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் விபரத்திரட்டு (2004), அறுவடைகள் (2015) போன்ற வரலாற்று ஆவணங்களிலும் இனம்காட்டப்பட்டிருக்கிறார்.

ஏறாவூர் வாசிப்பு வட்டம்,ஹனிமூன் கலாமன்றம்,ஏறாவூர் பிரதேச செயலக கலாசார மத்திய நிலையம்,போன்றவற்றிலும், ஏறாவூர் பிரதேச செயலக வெளியீடான இனமதி சஞ்சிகைக்குழு உறுப்பினராகவும் இயங்கி வரும் மருதூர் ஜமால்தீன் ,இஸலாமிய நெறி நின்று மரபுக் கவிதைகள் படைத்த வரும் சிறந்த படைப்பாளி.இவரது இலக்கியப்பணி சிறந்தோங்க வாழ்த்துக்கள்.






# கல்முனை அல்-பஹ்ரியாவில் உயர்தர தின நிகழ்வு






**(சர்ஜூன் லாபீர்,எம்.என்.எம் அப் ராஸ்)**

கல்முனை அல் பஹ்ரியா தேசிய பாடசாலையின் உயர்தர மாணவர் தின நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம் பைசால் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மெடிலேன் வைத்தியசாலையின் பணிப்பாளரும்,கல்முனை முஹைத்தின் ஜூம்மா பள்ளி மற்றும் கடற்கரைப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ அஸீஸ் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் இந் நிகழ்வில் கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிமனையின் கணக்காளர் பிரபல வளவாளர் வை.

ஹபிபுல்லா கலந்து கொண்டு சிறப்பித்தார். மேலும் சிறப்பு அதிதிகளாக பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.ஏ அஸ்தர்,எம்.ஏ சலாம்,ஈ.றினோஸ்,பழைய மாணவர் சங்க செயலாளர் எம்.ஐ.எம் ஜிப்ரி,கல்முனை பிரிலியன் விளையாட்டு கழகத் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான எம்.எஸ்.எம் பழீல் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இதன் போது "சதசு" என்ற உயர்தர மாணவர்களின் சஞ்சிகையும் வெளியீடு வைக்கப்பட்டதுடன், பாடசாலையிலிருந்து கடந்த முறை பல்கலைக்கழகத்திற்க்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அதிதிகளினால் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மஸ்கெலியா தோட்டத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவருக்கு 50 இலட்சம் நஷ்டஈடு

**(செ.தி.பெருமாள்)**

மஸ்கெலியா சாமிமலை கவரவில தோட்டத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த நல்லையா சிவக்குமாரின் குடும்பத்தினருக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தொடர் அழுத்தங்களினால் 50 இலட்சம் ரூபாய் நஷ்டஈட்டு தொகை வழங்க ஹொரண பெருந்தோட்ட நிர்வாகத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



அத்தோடு, உயிரிழந்த நபரின் மனைவிக்கு குறித்த தோட்டத்தில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் பணிபுரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதோடு, குறித்த குடும்பத்தினருக்கு 20 பேர்ச் காணியும் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான எழுத்து மூல ஆவணத்தை ஹொரண பெருந்தோட்ட நிர்வாகத்தினர் தனக்கு அனுப்பி வைத்துள்ளனர் என ஜீவன் தொண்டமான் எம்.பி. தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஹொரண பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான சாமிமலை கவரவில தோட்டத்தில் வசித்து வந்த நல்லையா சிவக்குமார் என்ற 33 வயதுடைய தொழிலாளி ஒருவர் கடந்த மாதம் 24ஆம் திகதி மின்சாரம் தாக்கி கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி இம்மாதம் 5ம் திகதி உயிரிழந்திருந்தார்.

குறித்த நபரின் மரணம் தொடர்பில் எனது தலைமையிலான இ.தொ.கா குழுவினர் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டியதோடு பாதிக்கப்பட்டுள்ள குடும்பத்தாருக்கு நியாயமான இழப்பீட்டுத் தொகை ஒன்று வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் ஹொரண பெருந்தோட்ட கம்பனியிடம் முன் வைத்திருந்தோம்.

அதற்கமைய (08.12.2022) உயிரிழந்த நல்லையா சிவக்குமாரின் குடும்பத்தினருக்கு 50 இலட்ச ரூபாய் நஷ்ட ஈடு வழங்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

# தமிழ் நாடு சட்ட மன்ற உறுப்பினர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லாவின் நூல் வெளியீடு











**(அஷ்ரப் ஏ சமத்)**

தமிழ் நாடு சட்ட மன்ற உறுப்பினர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா வின் - நபிகளாரின் சமூக உறவு எனும் இன்று முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் கொழும்பு தபால் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி புர்ஹான் பீபி இப்திக்கார் தலைமையில் நடைபெற்றது.

தலைமை உரையை மீடியா போரத்தின் ஆலோசகர் என். எம். அமீன் பிரதம அதிதியாக வெளிநாட்டு அமைச்சரும், ஜனாதிபதி சட்டத்தரணி யுமான அலி சப்ரி, சிறப்புப் பேச்சினை தேசியத் தலைவர் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் -முனீருல் மில்லத் பேராசிரியர் கே.எம்.காதர் மொஹிதீன், கௌரவ அதிதிகளான - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் றிசாத் பதியுதீன் நூலின் முதல் பிரதியை முஸ்லிம் ஸலாஹூத்தீன் சிறப்புப் பேச்சினை - காலைக்திர்ஆசிரியர் என். வித்தியாதரன் .

ஏற்புரை நூலாசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர். ஆகியோர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்

இந்நிகழ்விற்கு இந்தியாவில் இருந்து பேராசிரியர் கே.எம். காதர் மொஹிதீன் தலைமையில் இலங்கை வந்த குழுவில் ஏனைய ஏழு பேரும் கலந்து கொண்டனர்.

இவ் வெளியீட்டு விழாவில் தலைமை உரை நிகழ்த்திய என். எம்.அமீன் தெரிவித்ததாவது,

இந்த நாட்டில் உள்ள அரசியல்வாதிகள் , அமைச்சர்கள் ஒன்றினைந்து இலங்கையில் முஸ்லிம்கள் எவ்வித நூல்களையோ அல்குர்ஆன் பிரதிகளையோ வெளிநாட்டிலிருந்து தருவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நூலசிரியரின் 200 நூல்களை இவ் விழாவுக்கு இந்தியாவிலிருந்து விமானமூலம் அனுப்பப்பட்ட நூலைப் பெற்றுக் கொள்ள நாங்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கினோம். அதுவும் எமது உலகத்தலைவர் நபிகள் பற்றிய தமிழ் நூலொன்றை நாம் விமான நிலையம் ஊடாக எடுக்க முடியாத நிலை இந்த நாட்டு முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இலங்கை முஸ்லிம்களுக்கு இத் தடை விதிக்கப்பட்டதாகும்.

இந் நூலின் 3 பிரதிகளை முன் பாதுகாப்பு அமைச்சுக்குக் கொடுத்தல் வேண்டும். அதன் பின்னர் அதனை முஸ்லிம் சமயஅலுவலகத்தினால் நியமிக்கப்பட்ட நூல் ஆரய்ச்சிக் குழு அதனை படித்து அனுமதியோ அல்லது சிபார்சு பௌத்த சாசன அமைச்சுக்கு வழங்குதல் வேண்டும். அதனை பாதுகாப்பு அமைச்சு அனுமதித்து விமானநிலையத்தில் உள்ள சுங்கத்திணைக்களத்திற்கு வழங்குவதற்கு கடிதம் பெறப்படல் வேண்டும் அதன் பின்னரே நாங்கள் குறிப்பிட்ட நூலை விமான நிலையத்திலிருந்து பெறமுடியும்.

ஊடகச் சங்கமொன்றுக்கே ஒரு புத்தக வெளியீட்டு விழாவுக்கு இந்தியாவிலிருந்து அனுப்பிவைத்த நூலொன்றைப் பெறுவதற்கு நாங்கள் கடந்த ஒரு மாத காலமாக மிகவும் கஸ்டத்தினை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அவ்வாறாயின் சாதாரன முஸ்லிம்கள் இளம் மாணவர்கள் தனக்குத் தேவையான இஸ்லாமிய நூலொன்றையோ குர்ஆனையோ வெளிநாட்டிலிருந்து அல்லது இந்தியாவில் இருந்து எவ்வாறு தருவிப்பது. ?

ஆகவேதான் இவ்விடயத்தினை இவ் விழாவிற்கு வருகை தந்துள்ள அமைச்சர் அலி சப்றி, மற்றும் அரசியல் தலைவர்கள் கவனத்திற்கு இவ்விடயத்தினை கொண்டுவருகின்றேன். அந்நோக்கத்திற்காக கற்பதற்கு தேவையான நூல்களை இறக்குமதி செய்வதில் உள்ள தடைகளை நீக்குமாறு அவர் வேண்டிக் கொண்டார்.

அத்துடன் இந்தக் அல் குர்ஆனை சுமந்து ஓதிய இளம் நூாற்றுக்கணக்கான வாலிபர்கள் சிறையில் வாடுகின்றார்கள். அவர்களது பெற்றோர்கள் தமது மகனை விடுவிப்பதற்காக நீதிமன்றம் ,சிறைச்சாலை மற்றும் சட்டத்தரணிகளை நாடியும் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.







பலஸ்தீன ஒருமைப்பாட்டு தின நிகழ்வு அண்மையில் பண்டாரநாயக்க மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது இலங்கையின் ஐ நா தூதுவர் ஹனா சிங்கர் உரையாற்றுவதனையும் கலந்து கொண்ட பிரமுகர்களையும் படத்தில் காணலாம் படங்கள்.

(ஏ.எம் நவாஸ்)

# பிரிவினை பேதங்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தியில் இடமில்லை

## ஞாயிறு நடக்கும் மகாநாடு பற்றி மூத்த தலைவர் இம்தியாஸ் பாகீர் மாகார்



எவ்வடிவிலான பிரிவினை போதங்களுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியில் இடமில்லை எனவும்,ஐக்கியம் மேலோங்கும் மூலோபாய தேச நலன் கரிசனையை தன்னகத்தே கொண்ட கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி செயல் முனைவு பெற்றுள்ளதாகவும் “கட்சி அரசியல்” போரார்வ முன்மொழிவுகளிலிருந்து முதலில் விலக வேண்டும் எனவும், பேரார்வ அடிப்படையிலான முன்மொழிவுகளிலிருந்து விலகி தேசிய கட்சிக்குரிய முற்போக்கு கொள்கைகளைக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தி தனது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

போரார்வ முன்மொழிவுகள் ஒரு கட்சியின் அதிகார இருப்பின் ஸ்திரத்தின் வலுவாக்கத்தை தீர்மானிக்காது எனவும், அது ஒரு கட்சியின் மூலோபாய நலனாக ஒருபோதும் அமைய முடியாது எனவும்,ஐக்கிய மக்கள் சக்தி இந்த பிற்போக்குத் தன பேரார்வ ஊந்துதல்களுக்கும் அதன் உடனடி விளைவாக மேலேலும் உணர்ச்சிவயப்பட்ட வாக்குறுதி அரசியல் கோஷங்களை பொருட்படுத்தும் ஓர் அரசியல் கட்சியாக பயணிக்காது எனவும் அவர் தெரிவித்தார்.

கட்சி அரசியலின் இயக்காற்றலை தீர்மானிப்பதாக கொள்கைகள்,

முன்மொழிவுகள்,அரசியல் நிலைப்பாடுகள்,அரசாங்கத்தில் அரசியல் ஆதிக்கம்,

அரசாங்கத்தின் உள்ளக அரசியலிலும் அமையும் போக்கையே ஐக்கிய மக்கள் சக்தி கையாள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

சமூக விழிப்பியலை ஏற்படுத்துவதில் கட்சி அரசியல் தொடர்ச்சியாக தோல்வியுற்றிருக்கிறது என்ற விமர்சனம் நீண்ட காலமாக நிலவி வந்தாலும்,இதன் இடைவெளியை குறைக்க ஐக்கிய மக்கள் சக்தி முனைப்போடு மக்கள் பங்கேற்பை நெருக்கமாக்கும் கட்டமைப்புகளை பலப்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் கட்சிகளின் “அரசியல் செயல்நேக்கம்” என்ன என்பது பற்றி ஆதரவாளர்கள்,மக்கள் சமூகம் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும்,மூடிய நிலைக்குள் மூலேபாயம் வகுப்பது ஜனநாயக விழுமியமல்ல எனவும்,கட்சியின் உள்ளக ஜனநாயகம் என்றும் பாதுகாக்கப்படும் இயல்பு ஐக்கிய மக்கள் சக்திக்கு கட்சி யாப்பின் ஊடாக உள்ளதாகவும்,

குறுகிய தனிநபர் ஆதிக்கச் செல்வாக்கு,சிறு சிறு குழுவாதங்கள் ஐக்கிய மக்கள் சக்திக்குள் நிலைகொள்ளாது எனவும் தெரிவித்தார்.

தன்னிச்சை தீர்மானங்களுக்கான வாயில்கள் கட்சி யாப்பினூடாக மூடப்பட்டுள்ளதாகவும்,சமகால இலங்கை கட்சி அரசியலில் உள்ளக ஜனநாயகம் உச்சளவில் போனப்படும் ஒரே கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய பல்வேறு மட்டங்களைக் கொண்ட அரசியலின் இயக்காற்றலை புரிந்து கொள்ள மக்களும் முன்வர வேண்டும் எனவும்,குறிப்பாக இளம் தலைமுறை இந்த கட்சியின் புதிய போக்கை புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

கட்சியின் வருடாந்த மாநாடு தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# எங்கள் கடலையும் நிலங்களையும் சிலரின் இலாபத்துக்காக தாரைவார்ப்பது மக்களுக்கு செய்யும் துரோகம்

## – சபையில் அங்கஜன் இராமநாதன் காட்டம்



2023ம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் இன்று விவசாயம், மீன்பிடி, நீர்ப்பாசனம் தொடர்பாக இங்கு விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒன்றை நாம் மறந்துவிட்டோம். 2023 தொடங்கியதுமே இந்த நாட்டில் சின்னவெங்காயம், உருளைக்கிழங்கு, காய்கறிகள் எல்லாவற்றுக்கும் தட்டுப்பாடு வரப்போவதை நாங்கள் மறந்துவிட்டோம்.

இவ்வாறு (06) இடம்பெற்ற விவசாயம், கடற்றொழில், நீர்ப்பாசன துறைகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் அங்கஜன் இராமநாதன் எம்.பி. உரையாற்றினார்.

அவர், எங்கள் மாவட்டத்தில் இந்தாண்டு பெரும்போக பயிர்ச்செய்கை வழமைபோல நடக்கவில்லை. சின்ன வெங்காயம், உருளைக்கிழங்கு, காய்கறி எதுவும் இம்முறை வழமைபோல பயிரிடப்படவில்லை. யாழ்ப்பாணத்தின் விவசாய நிலங்கள் புற்களும் புதர்களுமாக நிரம்பிக்கிடக்கிறது. இப்போது ஒரு கிலா 400 ரூபாய்க்கு குறைவாக எந்தவொரு மரக்கறியையும் வாங்கமுடியாது. விரைவில் கையில் காசு இருந்தாலும் கடையில் காய்கறி இல்லாத நிலைதான் வரப்போகிறது.

அரசாங்கத்தை கேட்டால் விவசாயத்துக்கு வேண்டிய உதவிகளை செய்கிறோம், உரங்கள் வந்துள்ளன, கிருமிநாசினிகள் வந்துள்ளன, களைநாசினிகள் வந்துள்ளன என்று சொல்கிறார்கள். ஆனால் விவசாயிகளோ ஏராளமான பிரச்சனைகளை அடுக்கிக்கொண்டே போகிறார்கள்.

யாழ். மாவட்ட கமக்கார அமைப்புகளின் அதிகார சபை எனக்கு வழங்கியுள்ள கோரிக்கை கடிதத்தை நான் சபையில் சமர்ப்பிக்கிறேன்.

- மண்ணெண்ணையை தொடர்ந்து தட்டுப்பாடின்றி விநியோகிக்க வேண்டும்.

தற்போது மீனவர்களுக்கு மண்ணெண்ணை விநியோகம் இடம்பெற்றாலும், விவசாயிகளுக்கான விநியோகம் போதாது. இந்த வருட தொடக்கத்தில் 87 ரூபாய் விற்ற மண்ணெண்ணைகூட இப்போது பெற்றோலின் விலைக்கு கிட்ட வந்துவிட்டது. அதுவும் விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. எனவே அதற்கான மானிய பொறிமுறையை விரைவாக உருவாக்க வேண்டும் - என்றார்.

# இலங்கை காப்போம் நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு





(அபு அலா)

இலங்கை காப்போம் தொண்டு நிறுவனத்தின் அனுசரனை மற்றும் ஏற்பாட்டின் கீழ் திருகோணமலை அம்பாள் பாடசாலையில் கல்விகற்கும் தரம் 5 - 11 வரையாயான மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு காப்போம் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு. ருக்ஸ ாலி ரொனிக்கா தலைமையில் (06) குறித்த பாடசாலையின் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) எ.மன்சூர் கலந்துகொண்டதுடன், பாடசாலையின் அதிபர் என்.இலங்கேஸ்வரன் உள்ளிட்ட பாடசாலையின் ஆசிரியர்கள், காப்போம் நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிறுவாக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

# களுத்துறை முஸ்லிம் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா





(பேருவளை பீ.எம்.முக்தார்)

களுத்துறை கல்வி வலயத்தில் தலை சிறந்த முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகத் திகழும் களுத்துறை முஸ்லிம் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அதிபர் திருமதி சாபி அலவி தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் சிறப்பாக இடம் பெற்றது.

கொழும்பு கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மும்தாஜ் பேகம் பிரதம அதிதியாகவும் களுத்துறை கல்வி வளைய பிரதி கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜெயகுமார்,உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம்.இல்யாஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை,க. பொ.த.சாதாரண தரம் உயர்தர பரீட்சைகளில் திறமை சித்தி பெற்ற மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிகள் விழாவில் பரிசு,சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

களுத்துறை முன்னாள் நகர பிதா எம்.எம்.ஜௌபர்,தற்போதைய நகர சபை உறுப்பினர் முஹம்மத் ஹிஷாம்,பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் முஹம்மத் ஹில்மி உட்பட பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்,பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்கள்,முன்னாள் ஆசிரியர்கள்,உலமாக்கள்,கல்விமான்கள்,பெற்றோர்கள்,பள்ளிவாசல் நிர்வாகிகள் என பலரும் விழாவில் கலந்து சிறப்பித்தனர்.



களுத்துறை மாவட்டம் மத்துகம தேர்தல் தொகுதி கந்தஹேன ஸ்ரீ அபிமங்கலாராம விகாரையின் விகாரதிபதி ஸ்ரீ பஞ்சானந்த ஹிமியின் பிறந்த தினத்தை முன்னிட்டு விகாரையில் நடைபெற்ற மாபெரும் வைபவத்தில் மேற்படி விகாரைக்கு இன, மத பேதமின்றி நீர் விநியோகத்தை பெற்றுக்கொடுத்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஸ்லமை கௌரவித்து விஹாராதிபதியினால் இன நல்லுறவுக்கான மனிதநேய கௌரவநினைவுச் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.

(பேருவளை பி.எம். முக்தார்)